# Modern Governments-I

UNIT-1

18K1HAH1

தற்கால அரசாங்கங்கள் என்ற பாடம் அரசியலைப் பற்றியதாகும். அரசியல் என்பது அரசையும் ஆளுகின்ற ஒரு சமூகத்தையும் குறிக்கிறது. ஒரு நாட்டை ஆளும் சமூகத்தினரே 'அரசு' என்று அழைக்கப்படுகின்றனர் இவர்கள் சட்டம் இயற்றவும், சட்டத்தைச் செயல்படுத்தவும் அதிகாரம் பெற்றுள்ளனர். இந்த ஆளும் சமூகத்தினர் மக்களின் ஒத்துழைப்பையும், கீழ்படிதலையும் உரிமையுடன் கோருகின்றனர். காரணம் அவர்களிடம் உள்ள ஆளுமை மக்களிடமிருந்தே பெறப்பட்டது ஆகும்.

இவ்வாறு, ஆளப்படுகிறவர்கள் ஆளும் சமூகத்தினர் ஆகிய இரு பிரிவினருக்கும் இடையே உள்ள சம்பந்தங்களையும் சட்டப்பூர்வமான தொடர்புகளையும் பற்றி விளக்குவது தற்கால அரசாங்கங்கள்' என்ற இந்த பாடத்தின் நோக்கமாகும்.

அரசியலமைப்பு என்ற சொல்லுக்கு பல அறிஞர்கள் வெவ்வேறு விதமான விளக்கங்களை அளித்துள்ளனர். எல்லோருக்கும் " விளக்கமாக கீழ்க்கண்ட விளக்கம் திகழ்கிறது. (அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு, இவர்களது உரிமைகள், கட அரசாங்க உறுப்புகளாகிய சட்டத்துறை நிர்வாகத்துறை நீதிதுறை ஆகியவற்றின் அமைப்பு அவைகளுக்குள்ள தொடர்பு மற்றும் அதிகாரங்கள் விதிகள் நெறி முறைகள் ஆகியவை பற்றிக்

குறிப்பிடும் தொகுப்பே அரசியலமைப்பு ஆகும்.)

**அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்:**

ஒரு அரசாங்கத்திற்குவலினமயையும் அதிகாரத்தையும் அளிக்கும் அரசியலமைப்பு கீழ்க்கண்ட சிறப்பியல்புகளைப் பெற்றிருக்கவேண்டும்.

முதலாவதாக, அரசியலமைப்பு தெளிவாகவும் திட்டவட்ட மாகவும் இருக்க வேண்டும். எனெனில், அதில் காணப்படும் சொற்கள் தெளிவற்றவையாகவும், சந்தேகங்கள் தோன்ற காரணமாகவும் அமைந்தால் முரண்பட்ட கருத்துகளும் விளக்கங்களும் கொடுக்கப்பட்டு குழப்பம் ஏற்பட வழிவகுக்கும்.

இரண்டாவதாக, அரசியலமைப்பு சுருக்கமாகவும் அதே நேரம் அரசாங்கத்தின் முக்கியக் கூறுபாடுகளும் அதன் நோக்கங்களும், பணிகளும் விளக்கமாகவும் கூறப்பட்டிருக்க வேண்டும்.

மூன்றாவதாக, அரசியலமைப்பு அடிக்கடி மாறாமல் நிலைத் தன்மையுடன் இருக்க வேண்டும். அரசியலமைப்பு அடிக்கடி மாற்றப்பட்டால், நாட்டிற்குத் தீமையே எற்படும்.)

**அரசியலமைப்பின் அம்சங்கள்:**

ஒவ்வொரு அரசியலமைப்பிலும் மூன்று முக்கியத் துறைகள் உண்டு. அவை சட்டம் இயற்றும் துறை நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகியவையாகும்.)

-1) சட்டமன்றங்களை அமைக்கவும், மக்களை ஆளுவதற்கான (சட்டங்களை இயற்றவும் சட்டங்கள் இயற்றப்படுவதற்கான முறைகளைப் பற்றியும் கூறும் பகுதி சட்டம் இயற்றும் துறை (Liegislature) ஆகும்.

2. சட்டமன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி நாட்டின் நிர்வாகத்தை ஒழுங்காக நடத்தவதற்கான குறிப்புகளைக் கொண்ட பகுதி நிர்வாகத்துறை' (Executive) ஆகும்,

3. இயற்றப்பட்ட சட்டங்களுக்கு விளக்கம் கொடுக்கவும், சட்டங்களைச் செயல்படுத்தும் போது ஏற்படும் இடையூறுகளைத் தடுக்கவும், சட்டத்தை மீறுகின்ற குற்றவாளிகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறவும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவும் அமைக்கப்பட்டிருப்பது நீதித்துறை' (judiciary) ஆகும்.

## அரசியலமைப்பின் வகைகள்:-

அரசியலமைப்பின் தன்மையின் அடிப்படையில் எழுதப்பட்ட அரசியலமைப்பு, எழுதப்படாத அரசியலமைப்பு என்றும், நெகிழும் அரசியலமைப்பு நெகிழா அரசியலமைப்பு என்றும், அரசின் தன்மையின் அடிப்படையில் ஒற்றையாட்சி முறை அரசியலமைப்பு என்றும், கூட்டாட்சி முறை அரசியலமைப்பு என்றும் நிர்வாகத்துறையின் தன்மையின் அடிப்படையில் பாராளுமன்ற முறை அரசு என்றும்; தலைவர் முறை அரசு என்றும் சட்டத்துறையின் தன்மை அடிப்படையில் மக்களிடம் நேரடி பொறுப்புடைய அரசியலமைப்பு என்றும்; நீதித்துறையின் அடிப்படையில் சட்டத்தின் ஆட்சியுடைய அரசு, ஆட்சி முறைச்சட்டத்தையுடைய அரசு என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் ஒவ்வொரு வகை அரசியலமைப்பையும் விரிவாகக் காண்போம்.

## எழுதப்பட்ட அரசியலமைப்பு:-

அரசாங்க நிறுவனங்களின் அதிகாரங்கள், அரசின் காரியங்களை நிர்வகித்து வரும் பல்வேறு அதிகாரிகளின் அதிகார எல்லைகள்,

மக்களுடைய உரிமைகள், மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள உறவுகள் அடிப்படைக் கொள்கைகள் போன்றவை சம்பந்தப்பட்ட விதிகள் ஒரு படிவமாக அல்லது ஆவணமாக எழுதப்பபட்டிருப்பதே எழுதப்பட்ட அரசியலமைப்பாகும்

எழுதப்பட்ட அரசியலமைப்புக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் இந்தியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அரசியலமைப்புகள் திகழ்கின்றன.

அமெரிக்க அரசியலமைப்பை 1787- செப்டம்பர் 17 ம் தேதி ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையிலான ஒரு குழு ஒரே ஆவணத்தில் வகுத்தது.) இந்திய அரசியலமைப்பானது இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையால் 1949 - நவம்பர் 26-ல் ஒரு ஆவணமாக உருவாக்கப்பட்டு 1950ஜனவரி 26-ல் நடைமுறைப்பபடுத்தப்பட்டது. பிரெஞ்சு நாட்டு மூன்றாவது குடியரசின் அரசியலமைப்பு 1875-ல் மூன்று ஆவணங்களில் உருவாக்கப்பட்டது. இவ்வாறு எழுதப்பட்ட அரசியலமைப்புகள் நல்ல விவாதங்களின் அடிப்படையில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை யாகும். எனவே தான் நிரந்தரமானவைகளாக இருக்கின்றன.

**<u>எழுதப்பட்ட அரசியலமைப்பின் வளர்ச்சி:</u>**

காலம் மாறிக் கொண்டே செல்லும் போது ஒரு நாட்டின் அரசியல் பொருளாதார சமூக சூழ்நிலைகளும் மாறுகின்றன. எனவே அரசியலமைப்புகளும், சூழ்நிலைக்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு காலத்தோடு வளர வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு அரசியலமைப்பு எழுதப்பட்டது என்ற அடிப்படையில் மாற்றாமல் வைத்தால் சமுதாயத்திற்கு கேடு உண்டாகும். எனவே தான் எழுதப்பட்ட அரசியலமைப்பில் மாற்றங்களைச் செய்து அது வளர்ச்சியடைய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

**a) அரசியலமைப்புத் திருத்தங்கள் மூலம்:**

அரசியலமைப்புத் திருத்தங்கள் மூலம் எழுதப்பட்ட அரசியலமைப்பு வளர்ச்சியடைகிறது. நாட்டிற்குத் தேவையான திருத்தம் ஒன்று அரசியலமைப்பில் செய்யப்படவேண்டுமென்று ஆளுகின்றவர்கள் கருதினால் அத்திருத்தத்தை ஒரு மசோதாவாக (Bill) மக்கள் சபையில் சமம் கொண்டு வரலாம். அதனை சபையின் பெரும்பான்மை உறுப்பினாகள் ஆதரித்து நிறைவேற்றிவிட்டால் ஜனாதிபதியின் ஒப்புதலுடன் அத்திருத்தம் அரசியலமைப்பில் இடம் பெறும். இந்தியாவில் இந்த முறை பின்பற்றப்படுகிறது. ஆனால் ஸ்விட்சர்லாந்து ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மக்கள் ஒப்பம்' என்ற முறை பின்பற்றப்பட்டது.

**b) நீதிமன்ற விளக்கங்களின் மூலம்:**

நீதிமன்ற விளங்கங்களின் மூலமும் ஒரு அரசியலமைப்பு வளர்ச்சியடைகிறது. நீதிமன்ற விளக்கம் என்பது நீதிமன்றங்கள் சட்டங்களுக்கு அளிக்கும் விளக்கங்கள் ஆகும். நீதிமன்றங்களின் விளக்கங்களும் தீர்ப்புகளும் ஒழுங்காக எழுதப்பட்டு பதிவு செய்யப்படுவதால் அவைகள் அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு ஆதாரங்களாக விளங்குகின்றன.

**c)வழக்கங்கள் வழக்காறுகள் மூலமாக:**

வழக்கங்களும் வழக்காறுகளும் அரசியமைப்பின் வளர்ச்சிக்கு உறுதுணை செய்கின்றன. 'மக்களுக்கு உகந்ததாக, நியாயமானதாக நீண்ட நாள் சமூகத்தில் நிலவி வரும் பழக்கத்தை மனிதன் தன் வாழ்வில் ஏற்றுக் கொள்கிறான்' என்று சாலமண்ட் என்பவர் கூறுகிறார். மக்கள் மத்தியில் நடைமுறையில் இருந்துவரும் இந்த வழக்கங்களும் வழக்காறுகளும் அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. எழுதப்பட்ட அரசியலமைப்புகளான அமெரிக்கா, பிரான்சு அரசியலமைப்புகளிலும். இங்கிலாந்து போன்ற எழுதப்படாத

அரசியலமைப்புகளிலும் வழக் காறுகள் அதிகச் செல்வாக்குடன் ஆதிக்கம் செலுத்துகின்றன.

**<u>d) சட்டமன்றங்கள் இயற்றும் சாதாரணச் சட்டங்கள் மூலம்:</u>**

அரசயிலமைப்புகள் சட்டமன்றங்கள் இயற்றும் சாதாரணச் சட்டங்கள் மூலமும் வளர்ச்சியடைகின்றன. பொதுவாக அரசியலமைப்பு களில் எல்லா நிறுவனங்களையும் பற்றிய பரந்த எல்லைக் கோடுகளையே காட்டமுடிகிறது.

**<u>எழுதப்பட்ட அரசியலமைப்பின் நன்மைகள் (Merits):</u>**

1. எழுதப்பட்ட அரசியலமைப்புகள் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் இருக்கின்றன. இதனால் அரசாங்கத்தின் செயல்கள் அரசியலமைப்பிற்கு உட்பட்டதா என்பதை சரிபார்க்க இயலும்.

2. இது எழுதப்பட்டுள்ளதாலும் ஒரு ஆவணமாக இருப்பதாலும் உறுதியானதாகவும் நிலையானதாகவும் உள்ளது.

3. சிறந்த அனுபவமும் அறிவும் படைத்த தலைவர்களைக் கொண்டு உருவாக்கப்படுவதால் எழுதப்பட அரசயிலமைப்பு ஒரு . புனிதமான சிறந்த சாசனமாகிறது.

4. தனி நபர்களின் உரிமைகளும், மக்களின் அடிப்படை உரிமைகளும் பாதுகாக்கப்பட்ட உறுதியளிக்கிறது.

5. ஆட்சி செய்கின்றவர்களின் அதிகார எல்லைகள் தெளிவாகக் கூறுப்பட்டுள்ளதால் அவர்கள் தங்கள் அதிகார வரம்பை மீறுவது தடுக்கப்படுகிறது..

6. தெளிவாக எழுதப்பட்டுள்ளதால் யாவரும் படித்து எளிதில் புரிந்து கொள்ள உதவுகிறது. '

7. மக்கள் மத்தியில் திடீரென ஏற்படும் மன எழுச்சியினால் அரசியலமைப்பை மாற்றவோ திருத்தவோ முடியாது.

8. எழுதப்பட்ட அரசயிலமைப்பை எளிதில் மாற்ற முடியாது. இது கூட்டாட்சி நாடுகளுக்கு மிகவும் ஏற்புடைய அரசியலமைப்பாகும்.

<u>**குறைகள் (Demerits):**</u>

1. அரசியல், சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு ஏற்றபடியும் காலத்திற்கேற்பவும் செயல்படுவதற்கு எழுதப்பட்ட அரசயிலமைப்பு வரு தடையாக உள்ளது.)

2. அரசியலமைப்பு ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழுதப்பட்டவை யாகும். அப்போது காணப்பட்ட அரசியல் கோட்பாடுகள் காலப்போக்கில் உதவாமல் போய்விடும். எனவே முன்னேறிவரும் மனித நாகரிகத்திற்கு இது தடையாக உள்ளது.

3. மிக நெருக்கடியானகாலங்களில்கூட மாற்ற முடியாத அளவிற்கு நிரந்தரமானவைகளாக அமைந்துள்ளது.

4. எழுதப்பட்ட அரசியலமைப்பு நிரந்தரமாக அமைந்து விடுவதால் புரட்சிகள் ஏற்பட ஒரு காரணமாக அமையலாம்.

5. அரசியலமைப்பை உருவாக்கும் குழுவினர் தங்களுக்கு விருப்பமான கருத்துக்களை அரசியலமைப்பில் சேர்த்து விடுவதற்கு வாய்ப்பு உள்ளது.

6. அரசியலமைப்பின் பிரிவுகளை விளக்கிக் கூறும் பொறுப்பு நீதித்துறையினரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. நீதிபதிகள் பழமையை விரும்புகிறவர்களாக இருந்துவிட்டால் மக்கள் விரும்புகிற நேரத்தில் கூட அரசியலமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாமல் போக வாய்ப்பு உள்ளது.

## எழுதப்படாத அரசியலமைப்பு (Unwritten constitution)

அரசாங்க நிறுவனங்களின் அமைப்பு, அதிகாரங்கள் நெறி முறைக் கோட்பாடுகள், அதிகாரிகளின் அதிகார எல்லைகள், குடி மக்களின் ரிமைகள், மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே உள்ள தொடர்புகள் ஆகியவை பற்றி தொகுத்து சேர்த்து முழுவதுமாக ஒரு ஆவணத்தில் எழுதப்படாமல் இருப்பதே' ஒரு நாட்டின் எழுதப்படாத அரசியலமைப்பு என்று சொல்லப்படுகிறது.)

உலகிலலேயே எழுதப்படாத அரசியலமைப்பு என்று கறப்படுவது இங்கிலாந்து அரசியலமைப்பாகும் இது காலத்தால் வளர்ந்தது, இங்கிலாந்தில் அரசியலமைப்பு எழுதப்படவில்லை இல்லை, அமெக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் அரசியலமைப்பைப் போன்று ஒரு குறிப்பிட்ட காலத்தில் உருவாக்கப்படவும் இல்லை.

## எழுதப்படாத அரசியலமைப்பின் நிறைகள் (Maritai:

அரசியலமைப்பு நிரந்தரமாக எழுதப்படாமல் இருப்பதால் வளரும் சமுதாயத்தின் மாற்றங்களுக்கு ஏற்றப்படி புதிய கருத்துக்களைப் புகுத்திக்கொள்வதற்கு உதவுகிறது.

- இவ்வாறு புதிய கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்படுவதால் அரசியலமைப்பும் விரித்து வளர்ந்து கொண்டு வளர வாய்ப்பு உள்ளது.

| -. எழுதப்படாத அராலியமைப்பு தொழும் தன்மை கொண்டுள்ளதால் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது. தெனால் நாட்டில் புரட்சி யற்படுவதைத்தடுக்கிறது.

4.இவ்வித அரசியலமைப்பில் நீதிமன்றங்களின் அதிகாரம் ஓரளவு குறைக்கப்பட்டிருப்பதால் நீதிமன்ற சர்வாதிகாரத்திற்கு வழி இல்லாமல் போய் விடுகிறது.

**<u>குறைகள் (Demerits):</u>**

1. எழுதப்படாத அரசியலமைப்பின் முக்கியக் குறையாகம், கருதப்படுவது இகள் தெளிவற்றதும் உறுதியற்றதுமான ஒரு நிலையே

2.இது விரிந்து கொடுக்கும் கள்மையைக் கொண்டிருப்பதால் ஒரு நிரந்தரமற்ற அரசியலமைப்பாகிவிடும்.

3. இவ்வகை அரசியலமைப்பு உள்ள நாடுகளில் சாதாரணர் சட்டங்களுக்கும் அரசியலமைப்புச் சட்டங்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய் விடுகிறது. தெனால் ஏராளமான திருத்தங்களை அடிக்கடி செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது.

4. ஆளும் கட்சியின் விருப்பப்படியும், தனி நபரின் விருப்பப்படியும் அரசியயமைய்யைத் திருத்த வழி எற்படுகிறது.

5. தெளிவாகவும் திட்டவட்டமாகவும் இல்லாததால் மிருதியாகம் சார்ந்திருக்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது. இதனால் எழுதப்படாத அரசியலமைப்பு நீதிமன்றங்களின்ளகப்பாவையாகவே மாறிவிடுது.

6. எழுதப்படாத சாசியலமைப்பைப் பரிந்து கொள்ள கோன மக்களால் முடியாது. எனவே ஆளுகிறவர்கள் மக்களை எளிதில் மாற்ற முடியும்,

7. தனி நபர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வழியே இல்லை ,

**<u>நெகிழா அரசியலமைப்பு:</u>**

ஒரு நாட்டின் சாதாரணச் சட்டங்களைத் திருத்துவதற்கு ஒரு முறையும், அரசியலமைப்புச் சட்டங்களைத் திருத்துவதற்கு தனிப்பட்ட ஒரு முறையும் பின்பற்றப்படுமானால் அவ்வகை அரசியலமைப்பு " நெகிழா அரசியலமைப்பு அல்லது எளிதில் மாற்ற முடியாத அரசியலமைப்பு' என்று கூறப்படுகிறது.

நெகிழாத அரசியலமைப்பிற்கு எடுத்துக்காட்டாக அமெரிக்க

அரசியலமைப்பை கூறலாம். இங்கே சாதாரணச்சட்டங்கள் காங்கிரஸில் சாதாரணப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுகிறது. ஆனா

அரசியலமைப்பு சட்டத்தைத்திருத்துவதற்கு கடினமான தனிப்பட்ட ! பிரத்யேகமான வேறு ஒரு முறை பின்பற்றப்படுகிறது. ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து நாடுகளின் அரசியலமைப்புகளும் நெகிழா இவ்வகை அரசியலமைப்புக்கு மிகப் பொருத்தமான உதாரணம் இங்கிலாந்து அரசியலமைப்பாகும். இங்கே சாதாரணச் சட்டங்களும் அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்களும் பாராளுமன்றத்தால் சாதாரணப் பெரும்பான்மை உறுப்பினர்களால் இயற்றப்படுகிறது.

**<u>நெகிழா அரசியலமைப்பின் நன்மைகள் (Merits):</u>**

1. அரசியலமைப்பைத் திருத்துவதற்குக் கடினமான முறை பின்பற்றப்படுவதால் அரசிலமைப்பின் மீது தனி மனிதரோ ஆட்சித் துறையோ சட்டமன்றமோ ஆக்கிரமிப்பு செய்வதும் அதிகார வரம்பை மீறுவதும் தடுக்கப்படுகிறது.

2. அரசியலமைப்பின் நெகிழாத் தன்மையினால் மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது. மேலும் சிறுபான்மை யினரின் உரிமைகளுக்கும் நல்ல பாதுகாப்பு கிடைக்கிறது.

3. நெகிழா அரசியலமைப்பு கூட்டாட்சி நாடுகளுக்கு மிகவும் பொருத்தமானது ஆகும்.

4.அரசியலமைப்பில் ஏதாவது மாற்றம் செய்யப்படும் முன்பு அதைப் பற்றித் தீவிரமாக ஆலோசிக்கவும் விவாதிக்கவும் வாய்ப்புக் கிடைக்கிறது.

**குறைகள் (Demerits):**

1. இதன் நெகிழாத் தன்மையினால் காலத்திற்கேற்ப மாற்றங்கள் செய்ய முடிவதில்லை . இதனால் பல நாடுகளில் புரட்சி ஏற்பட வழி வகுத்திருக்கிறது.

2. நெகிழா அரசியலமைப்பு பழமையாகவும் பிற்போக்குத்தன மாகவும் உள்ளது.

3. நாடு முன்னேறிக் கொண்டிருக்கும் போது அரசியலமைப்பு அசைவற்றுக் கிடப்பதால் வளர்ந்து கொண்டு வரும் ஜனநாயக நாடுகளுக்கு இவ்வகை அரசியலமைப்பு பொருத்தமற்றதாகக் கருதப்படுகிறது. -

4. நெகிழா அரசியலமைப்பில் நீதித்துறை மிக உயர்ந்ததாக மாறிவிடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. நீதித்துறையின் பழமைக் கொள்கையும் அதனடிப்படையில் கொடுக்கப்படும் புதிய விளக்கங்களும் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளன.

**நெகிழும் அரசியலமைப்பு (Flexible Constitution)**

'ஒரு நாட்டின் சாதாரணச் சட்டத்தைத் திருத்து வதற்கும் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கும் ஒரே மாதியான முறை பின்பற்றப்பட்டால் அந்நாட்டின் - அரசியலமைப்பு நெகிழும் அரசியலமைப்பு அல்லது எளிதில் மாற்றக்கூடிய அரசியலமைப்பு' என்று சொல்லப்படுகிறது.

**நன்மைகள் (Merits):**

1. தேவைக் கேற்ப அரசியலமைப்பில் மாற்றங்கள் செய்து கொள்ள முடிகிறது.

2. எளிதில் வளைந்து நெகிழ்ந்து கொடுப்பதால் மாறிவரும் காலத்திற்கேற்பவும் மக்கள் மன வளர்ச்சிக் கேற்பவும் இணைந்து செல்கிறது. இதனால் புரட்சிகள் தோன்றுவது தடுக்கப்படுகிறது.

3.புதிய கருத்துக்களுக்கும் தேவைகளுக்கும் இடமளிப்பதால் அரசியலமைப்பு வளர்ச்சியடைகிறது.

**குறைகள் (Demerits):**

1. நெகிழும் அரசியலமைப்பு உறுதியற்றதாகவும் நிலையற்ற தாகவும் உள்ளது. எனவே தேவைக்கேற்ப மாறுதலடையாமல் மக்களின் மன எழுச்சிக்கேற்ப எளிதில் மாறுதலடைந்து விடுகிறது.

2. மக்களின் உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு இல்லை .

3. ஆளுகின்றவர்கள் தங்கள் இஷ்டப்படி அரசியலமைப்பைத் திருத்தி மக்களைத் துன்பப்படுத்தலாம். இதனால் வல்லாட்சி ஏற்பட வழி உண்டு.

4. நெகிழும் அரசியலமைப்பு நீதிபதிகளின் கைப்பாவையாக இருப்பதால் குடியாட்சி முறைக்கு ஏற்றதாக இருக்காது.

5. கூட்டாட்சி முறைக்கும் நெகிழும் அரசியலமைப்பு ஏற்புடையது அல்ல.

6. நெகிழும் அரசியலமைப்பு பொது மக்களுக்கும் ஏற்றது அல்ல. காரணம், பொது மக்கள் கற்றவர்களாகவும் அரசியல் அறிவு கொண்டவர் ககளாகவும் விழிப்புணர்வுடனும் இருந்தால்தான் தங்கள் உரிமைகள்

பறிக்கப்படுவதை தடுத்து நிறுத்த முடியும்.

## UNIT-2

## ஒற்றையாட்சி, கூட்டாட்சி முறைஅரசியலமைப்பு

### ஒற்றையாட்சி முறை

ஒரு நாட்டின் அரசின் தன்மையின் அடிப்படையிலும், மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் இடையே நிலவும் உறவுகளின் அடிப்படையிலும் அரசியலமைப்புகள் ஒற்றையாட்சி முறை என்றும், கூட்டாட்சி முறை என்றும் பாகுபடுத்தப்படுகிறது -

ஒரு மத்திய அரசாங்கத்தின் ஆளுகையில் ஒரு அரசாங்கம் அமையுமென்றால் அது ஒற்றையாட்சி முறை அரசியலமைப்பு எனப்படும்' என்று C.F. ஸ்ட்ராங் என்பவர் கூறுகிறார். இதன்படி அரசாங்கத்தின் முழு அதிகாரமும் ஒரு மத்திய நிறுவனத்திடமோ அல்லது நிறவனங்களிடமோ அரசியலமைப்பால் கொடுக்கப்பட்டிருக்கும். அது இறைமைத் தன்மையுடையதாக இருக்கும். இங்கு மாநில அரசாங்கங்கள் இல்லை . அதிகாரப் பங்கீடும் கிடையாது. இந்த மத்திய அரசாங்கம் நிர்வாக வசதிக்காக தனக்குக் கீழ் பல நிர்வாக அலகுகளை (administrative units) உருவாக்கும். இந்த நிர்வாக அலகுகளுக்கு மத்திய அரசு தன் விருப்பப்படி அதிகாரங்களைக் கொடுக்கவும் கொடுத்த அதிகாரங்களைத் திரும்பப் பெறவும் அதிகாரம் பெற்றுள்ளது. நிர்வாக அலகுகளையே ரத்து செய்து விடும் அதிகாரம் பெற்றுள்ளது.

ஒற்றையாட்சி முறை அமைப்பில் ஒரே சட்ட மன்றமே காணப்படும். சட்டமியற்றும் மேலாண்மை மத்திய அரசட இது இயற்றும் சட்டமே செல்லுபடியாகும்.

அடுத்து ஒற்றையாட்சி முறை அரசில் அதிகாரப்ப பன்கீடு கிடையாது. பொதுவாக ஒற்றையாட்சி முறை அரசியல் 'எழுதப்படாததாகவோ, எழுதப்பட்டதாகவோ இருக்கின்றது. இங்கு ஒற்றைக் குடியுரிமையே உண்டு. சிறிய நாடுகளுக்கே ஒற்றையாட்சி முறை உகந்ததாக உள்ளது. இங்கிலாந்து, ஹாலந்து, பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, ஜப்பான் ஆகியவை ஒற்றையாட்சி முறை அரசியலமைப்புகளைக் கொண்ட நாடுகளாகும்.

**ஒற்றையாட்சி முறையின் நன்மைகள்:**

1. ஒற்றையாட்சி முறை அரசு எளிமையாகவும் சிக்கலற்றதாகவும் உள்ளது.

2. அரசியல் கொள்கைள், நிர்வாகம், சட்டங்கள் ஆகியவை நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியாகச் செயல்படுத்தப்படுகின்றன.

3. நாட்டில் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் ஏற்படுகிற்து. மக்களிடம் பிளவு மனப்பான்மை தோன்ற வழியில்லை.

4. இங்கு மத்திய அரசாங்க நிறுவனங்கள் மட்டுமே இருப்பதால் நாட்டின் நிர்வாகச் செலவு குறைவு. தேர்தல் செலவும் குறைவாகவே இருக்கும்.

5. தேசிய நலனே முக்கியத்துவம் பெறுவதால் நாட்டின் பாதுகாப்பிற்கும் பன்னாட்டு உறவிற்கும் உகந்ததாக உள்ளது.

6. இவ்வகை அரசியமைப்பு நெகிழும் தன்மை கொண்டிருப் பதால் நெருக்கடி காலங்களில் வளைந்து கொடுத்து புரட்சி ஏற்படாதவாறு தடுக்க முடிகிறது.

**<u>குறைகள் (Demerits):</u>**

1. ஒற்றையாட்சி முறை அரசு சிறிய நாடுகளுக்குத்தான் ஏற்றது. பல்வேறுபட்ட இனம், மொழி, மதம் ஆகியவற்றைக் கொண்ட.. பரப்பளவு உள்ள நாடுகளுக்குப் பொருந்தாது.

2. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஸ்தல அட்ல பற்றிய பூரண அறிவை ஆளுகின்றவர்கள் அடைய முடியாது. வட்டார நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன. '

3. அதிகாரப் பங்கீடு இல்லாததால் எல்லா அலுவல்கலையும் மத்திய அரசே கவனிக்கிறது. இதனால் மத்திய அரசில் நிர்வாக சுமை அதிகரிக்கிறது. இதனால் நிர்வாகத்திறன் பாதிக்கப்படும்.

4.அதிகாரங்களும் வலிமையும் மத்திய அரசிடமே குவிந்துள்ளதால் வல்லாட்சிக்கு வழிவகுக்கும்.

**<u>கூட்டாட்சி முறை அரசியலமைப்பு:-</u>**

கூட்டாட்சி என்பது அரசியல் பாடத்தில் புதுமையான படைப்பு அல்ல. பண்டைக்கால கிரேக்க நகர அரசுகள் கூட்டாட்சிக் கருத்துக்களின் கூறுகளைக் கொண்டு விளங்கின. கூட்டாட்சி பற்றி பல அரசியலறிஞர்கள் வெவ்வேறு விளக்கங்களைக் கொடுத்துள்ளனர்.

- 'பல அரசுகள் ஒன்று சேர்ந்து புதிய அரசை ஏற்படுத்தும் முறையே கூட்டாட்சி' என்று அலக்ஸாந்தர் ஹாமில்டன் கூறுகிறார்.

'கூட்டாட்சி என்பது நாட்டின் ஒருமைப்பாட்டையும் மாநிலங்களின் உரிமையையும் இணைக்கச் செய்யும் ஓர் அரசியல் ஏற்பாடாகும்' என்று பேராசிரியர்டைசி கூறுகிறார்)

இறைமையுடைய பல சிறு அரசுகளிடையே தோன்றிய ஒப்பந்தத்தின் விளைவாக தோன்றியதே கூட்டாட்சியாகும். கூட்டாட்சியில் ஒரு மத்திய அரசாங்கமும் பல மாநில அரசாங்கங்களும் இடம் பெறுகின்றன. இரண்டுமே அரசியலமைப்பிடமிருந்து நேரடியாகவே தங்கள் அதிகாரங்களைப் பெறுகின்றன. அதிகாரங்கள் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே சட்ட பூர்வமாக பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. அதிகார எல்லைகளும் வரையறுக்கப்பட்டுள்ளது. ஒன்றின் அதிகாரத்தை மற்றொன்று அபகரிக்க முடியாது. கூட்டாட்சியில் இணைந்த பிறகு பிரிந்து செல்வதற்கு மாநிலங்களுக்கு உரிமை கிடையாது. கூட்டாட்சி அரசியலமைப்பு எழுதப்பட்டதாகவும், நெகிழாத்தன்மை கொண்டதாகவும், உயர்வானதாகவும் திகழ்கிறது. கூட்டாட்சி அரசுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஆகும்.

**<u>கூட்டாட்சி உருவாகத் தேவையான சாதகமான சூழ்நிலைகள்:</u>**

கூட்டாட்சி அரசில் ஒரு மத்திய அரசாங்கமும் மாநில அளவில் பல அரசாங்கங்களும் உள்ளன. இவை இரண்டும் ஒற்றுமையுடனும் 'முரண்பாடுகள் இல்லாமலும் தங்கள் அதிகார எல்லைக்குள்

பிருப்பத்துடனும் இயங்க வேண்டும். இப்படிப்பட்ட சாதகமான 'சூழ்நிலைகள் இருந்தால்தான் கூட்டாட்சி நிரந்தரமாக நீக்க நிற்கும். கட்டாட்சி உருவாக மேலும் பல கீழ்கண்ட சாதகமான சூழ்நிலைகள், காணப்பட வேண்டும்.

1.கூட்டாட்சியில் சேரும் அரசுகளிடையே கூட்டாச்சி வேண்டும் என்ற விருப்பம் இருக்க வேண்டும். கூட்டாட்சியில் சேரவும் தங்கள் தனித்தன்மையைப் பாதுகாக்கவும் ஆர்வம் வேண்டும் 2.கூட்டாச்சியை அமைக்க விரும்பும் அரசுகளின் நிலப்பரப்புகளின் ஒன்றையொன்று ஒட்டியதாக இருக்க வேண்டும்.

3. கூட்டாட்சி வெற்றிகரமாக அமைய வேண்டுமானால் மக்கள் தியாக மனப்பான்மை கொண்டவர்களாக இருக்கவேண்டும். அரசியல் விழிப்புணர்வு வேண்டும். அரசின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கும் உணர்வு வேண்டும். தங்கள் உரிமைகளைப் பேணுகிறவர் களாகவும், கடமையாற்றுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். குறுகிய மனப்பான்மை இருக்கக் கூடாது.

4. கூட்டாட்சியை ஏற்படுத்தி உள்ள பகுதிகளுக்கிடையே பரப்பளவிலும், மக்கள் தொகையிலும், பொருளாதார வளர்ச்சியிலும் முடிந்த அளவு சம நிலை நிலவ வேண்டும்.

**<u>கூட்டாட்சியின் சிறந்த அம்சங்கள்:</u>** (இன்றியமையாத கூறுகள்)

ஒரு முழுவளர்ச்சியடைந்த கூட்டாட்சிக்கு கீழ்க்கண்ட முக்கியக் கூறுகள் அவசியமானதாகும். அவை,

1.அரசியலமைப்பின் மேன்மை

2. அதிகாரப் பங்கீடு

3. சுதந்திரமாக இயங்கும் நீதித்துறை

**<u>1. அரசியலமைப்பின் மேலாண்மை : (Supremacy of the constitution)</u>**

கூட்டாட்சி அரசியலமைப்பில் 'அரசியலமைப்பின் மேன்மை மிக முக்கியமானதாகும். இந்த அரசியலமைப்பு எழுதப்பட்ட வேண்டும். மத்திய, மாநில அரசாங்கங்களுக்குப் பொதுவானதாகவும் இருக்க வேண்டும். அதில் மத்திய மாநில அரசுகளின் அதிகாரம் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் இருத்தல் அவசியம். - .

கூட்டாட்சியில் மத்திய அரசும் மாநில அரசுகள் அதிகாரங்களை அரசியலமைப்பிடமிருந்தே பெறுகின்றன அரசியலமைப்பு எளிதல் மாற்ற முடியாததாகவும் அரசியலமைப்பைத் திருத்துவதில் மத்திய அரசால் அரசாங்கங்களுக்கும் சமபங்கிருக்க வேண்டும். மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும்.

**2. அதிகாரப் பங்கீடு (Division of Powers):**

கூட்டாட்சி முறையின் மிகச் சிறந்த அம்சம் மத்திய மாநில அரசுகளுக்கிடையே திருப்திகரமாக அதிகாரங்கள் பங்கிடப்பட்டுள்ளதே! யாகும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அதிகாரங்களான தேசப் பாதுகாப்பு, அயல் நாட்டுறவு, அயல் நாட்டு வாணிபம், தபால் , தந்தி, செய்தித்தொடர்பு, நாணயம் அடித்தல் ஆகியவை மத்திய அரசாங்கத்திடமும், ஸ்தல முக்கியத்துவமுடைய மின்சக்தி, கல்வி, குற்றவியல் சட்டங்கள், சாலைகள், வீதிகள், பராமரிப்பு, சிறு தொழில்கள், சுகாதாரம் ஆகிய அதிகாரங்கள் மாநிலங்களிடமும் விடப்படுகின்றன.

அதிகாரப் பங்கீட்டு முறை நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. முதலாவதாக கூட்டாட்சி அரசுக்கு அதிகாரங்களை ஒதுக்கிவிட்டு எஞ்சிய அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. இம்முறை அமெரிக்காவிலும், ஸ்விட்சர்லாந்திலும் உள்ளது. இரண்டாவதாக, மாநில

அரசாங்கங்களுக்கு முதலில் அதிகாரங்களை ஒதுக்கிவிட்டு எஞ்சிய அதிகாரங்களை மத்திய அரசு வைத்துக் கொள்கிறது. இவ்வித அதிகாரப் பங்கீட்டு முறை கனடாவில் உள்ளது. மூன்றாவதாக, மத்திய அரசாங்கத்திற்கான அதிகாரங்கள். மாநில அரசாங்கத்திற்கான அதிகாரங்கள் இரண்டுக்குமான பொதுவான அதிகாரங்கள் (Concurrent list) என்று அதிகாரங்கள் பங்கீடு செய்யப்படுகின்றன. இம்முறை இந்தியாவில் காணப்படுகிறது.

அதிகாரப் பங்கீட்டு முறை உள்ள அரசியலமைப்புதான் கூட்டாட்சித் தன்மையை அதிகமாகக் கொண்டிருக்கிறது. அதிகாரப் பங்கீடுதான் அரசியலமைப்பின் உயர்வையும் பாதுகாக்கிறது.

**3. <u>சுதந்திரமாக இயங்கும் தலைமை நீதிமன்றம் (Independent Judiciary)</u>**

கூட்டாட்சி அரசியலமைப்பு உள்ள நாடுகளில் தலைமை நீதி மன்றம் மிகவும் அவசியமாகிறது. அதிகாரப் பங்கீடு மூலம் தங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசும் மாநில அரசுகளும் மீறக்கூடாது. இவைகள் தங்கள் அதிகார எல்லைகளைத் தாண்டிச் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு கூட்டாட்சித் தலைமை நீதி மன்றத்தையே சாரும். ஒன்றின் மீது ஒன்று ஆதிக்கம் கொள்ளாமல் பார்த்து அதிகாரச் சமநிலையைக் கண்காணிக்கிறது தலைமை நீதிமன்றம்.

நில அரசுகளால் இயற்றப்பட்ட சட்டங்கள் மத்திய அரசுக்கும் மாநில அரசுசுக்கும் மாநில அரசுகளுக்கிமிடையே தோன்றும், வழக்குகளையும், மாநிலங்களுக்குமிடையே தோன்றும் வழக்குகளையும் மாநிலங்களுக்கும் தனி நபர்களுக்குமிடையே உள்ள வழக்குகளையும், மத்திய அரசுக்கும் தனி நபர்களுக்குமிடையே உள்ள வழக்குகளையும் விசாரித்துத் தீர்ப்புக் கூறுகிறது தலைமை நீதிமன்றம்.

மேலும் அரசியலமைப்பில் தோன்றும் ஐயப்பாடுகளும் விளக்கம் கூறுகிறது. மத்திய மாநில அரசுகளால் இயற்றப்பட்ட

அரசியலமைப்பிற்கு முரணாகச் சென்றுவிடாமல் பாதுகாக்கிறது. இவ்வாறு அரசியலமைப்பையும், மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் நடுநிலையான, சுதந்திரமாக இயங்கும் தலைமை நீதிமன்றம் கூட்டாட்சி அரசுக்கு வேண்டிய முக்கிய அம்சமாகும்.

**கூட்டாட்சி முறையின் நன்மைகள்:**

1. கூட்டாட்சி அரசியலமைப்பு பெரிய நாடுகளுக்கு மிகவும் பொருத்தமுடையதாக இருக்கிறது. இனம், மொழி, மதம் அடிப்படையில் உள்ள வேறுபாடுகளும், அதிக பரப்பளவும், அதிக மக்கள் தொகையுள்ள நாடுகளுக்கு கூட்டாட்சி முறை மிகவும் ஏற்றதாக அமைகிறது.

2. நாடு முழுவதற்கும் ஒரே சமயத்தில் ஒரே மாதிரியான விதிகளைச் செயல்படுத்த முடிகிறது. வட்டாரப் பிரச்சினைகளின் மீது அதிக அளவில் மாநில அரசுகளினால் கவனம் செலுத்த முடிகிறது.

3. அதிகாரங்கள் கூட்டாட்சி முறையில் பங்கீடு செய்யப் பட்டுள்ளதால் மத்திய அரசின் வேலைப்பளு குறைகிறது. இதனால் நிர்வாகத்திறன் அதிகரிக்கிறது.

4. கூட்டாட்சி முறையில் மக்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கு கொள்கின்றனர். அறிவாளிகள் அரசியலில் பங்கெடுத்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம். --

5. அரசியல் ஒருமைப்பாடும் ஒற்றுமையுணர்வும் முன்னேற்றமும்! கூட்டாட்சி அரசில் காணப்படுகிறது.

6. மாநிலங்கள் தங்கள் தேவைக் கேற்றபடி திட்டங்களை

பக் கொள்ள முடிகிறது. மேலும் மாநில முன்னேற்றத்திற்காகத் தீவிரமாகச் செயல்படவும் முடிகிறது. குறைகள்: (Demerita): 11. கூட்டாட்சி முறை சிக்கல் .

**<u>குறைகள்:</u>**

1. அதிகாரப் பங்கீட்டு முறையினால் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே தீராத தகராறுகள் இருந்து கொண்டே இருக்கும். இதனால் அரசியல் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படுகிறது. பிரிவினைவாதம் தலை தூக்குகிறது.

2.மாநிலங்களுக்கிடையேயும் இனவேற்றுமை, மொழி வேற்றுமை, எல்லைப்பிரச்சனை, நதிநீர் பங்கீட்டுப் பிரச்சனை ஆகியவை ஏற்பட வழி உண்டு.

3.மத்திய மாநில அரசுகளுக்கு தேர்தல் நடத்துவதற்கு ஏராளமான பணம் செலவு செய்ய வேண்டியதிருக்கிறது. இதனால் நிர்வாகச் செலவு அதிகரிக்கிறது. நாட்டின் பாதுகாப்புச் செலவும் அதிகரிக்கிறது.

## <u>UNIT-III</u>

# <u>நிர்வாகத்துறை (Executive)</u>

திட்டங்களைத் தீட்டுவதும், அவைகளுக்கான சட்டங்களை இயற்ற சட்டமன்றங்களைத் தூண்டுவதும், இயற்றப்பட்ட சட்டங்களை செயல்படுத்துவதும் இந்த நிர்வாகத்துறையே ஆகும்.நிர்வாகத்துறை பலவகைகளாகப் பிரிக்கலாம். அவை, உண்மை நாவாகத்துறை, பெயரளவு நிர்வாகத்துறை, ஒருமை நிர்வாகத பமை நிர்வாகத்துறை, தலைவர் முறை நிர்வாகத்துறை, பாராளுமன்ற நிர்வாகத்துறை ஆகியவையாகும்.

### <u>நிர்வாகத்துறையின் பணிகள்:</u>

#### <u>1) சட்டத்துறை சார்ந்த பணிகள்:</u>

நிர்வாகத்துறை சட்டத்துறை சார்ந்த பணிகளைச் செய்கிறது. நிர்வாகத்துறையின் இந்தப் பணி ஒவ்வொரு நாடுகளில் அமைந்திருக்கும் அரசாங்கங்களின் தன்மைக்கு ஏற்ப மாறுபடுகிறது பாராளுமன்ற அரசாங்க முறை நிலவும் நாடுகளில் பாராளுமன்றங்களைக் கூட்டுவதும், ஒத்திவைப்பதும், கலைப்பதும் நிர்வாகத்துறையின் பணிகளாகும் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்திற்கு முன்பே அதைக் கலைக்கும் அதிகாரமும், மறு தேர்தலுக்கு ஆணையிடும் அதிகாரமும் நிர்வாகத் துறையினருக்கு உண்டு.பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா நிர்வாகத்துறை தலைவரின் இசைவைப் பெற்ற பிறகே சட்டமாகும்

அவர் தனது மறுப்பாணை அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றம் இயற்றிய மசோதாவை தள்ளுபடி செய்யலாம்.

பாராளுமன்றக் கூட்டம் நடைபெறாத காலத்தில் அவசர ஆணைகள் மூலம் (Ordinences) நிர்வாகத்துறை தலைவர் சட்டங்களை இயற்றுகிறார். இந்தப் பிரகடனங்கள் பாராளுமன்றச் சட்டத்திற்குச் சமமான வலிமை உடையவைகள் ஆகும். இந்தியாவில் குடியரசுத்தலைவர் பிரகடனங்கள் மூலம் சட்டம் இயற்றலாம்.

**2.நீதித்துறை சார்ந்த பணிகள்:**

நீதித்துறை சார்ந்த சில பணிகளையும் நிர்வாகத் துறை செய்கிறது. தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளை நிர்வாகத் துறையினரே நியமனம் செய்கிறார்கள் இந்தியாவில் தலைமை நீதிமன்ற தலைமை நீதிபதியை குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.பின்னர் தலைமை நீதிபதியின் ஆலோசனையின் பேரில் இதர நீதிபதிகளையும், குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார். இவ்வாறு நீதிபதிகளின் நியமனத்தில் நிர்வாகத்துறை செல்வாக்குப் பெற்றுள்ளது. நிர்வாகத்துறைத்தலைவர் குற்றவாளிகளை மன்னிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார். இந்தியக் குடியரசுத்தலைவருக்கு ராணுவ நீதிமன்றங்கள் வழங்கும் தண்டனைகளைக் குறைக்கவும் அல்லது தள்ளுபடி செய்யவும் உரிமை உண்டு. மத்திய அரசாங்கத்தின் சட்டங்களுக்கெதிராகச் செய்த குற்றங்களுக்கான தண்டனைகளை மன்னிக்க உரிமை உண்டு குற்றவாளிகளின் மரணதண்டனையை மன்னிக்கும் உரிமை குடியரசுத்தலைவருக்கு உண்டு.

**3) நிதித்துறை சார்ந்த பணிகள்:**

நிர்வாகத்துறையின் நிதி நிர்வாகப் பணிகள் முக்கியமானது ஆகும். ஆண்டு வரவு செலவுக் கணக்குகளைத் தயாரித்து பாராளுமன்றத்தின் புதலைப் பெறுகிறது. வரிவசூல்செய்வதும், அரசாங்க வருமானத்தைப்

றைகளுக்கும் பங்கீடு செய்து செலவிடுவதும் நிர்வாகத்துறையாகும். உள்நாட்டில் கடன் பெறுவதும், வெளிநாட்டிலிருந்து கடன் வாங்குவதும், இந்தக் கடன்களைத் தீர்ப்பதும் நிர்வாகக் கடமையாகும். வரிப்பணம் நன்கு செலவிடப்படுவதற்கும் அதன்மூலம் சமுதாயம் பயன்பெறுவதற்கும் நிர்வாகத்துறையே பொறுப்பேர்பர்.

**4) சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் பணி:**

உள்நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டு நிர்வாகத்துறையின் முக்கியமான பணியாகும். நாட்டில் அலை நிலவினால்தான் மக்கள் நல்வாழ்வும், முன்னேற்றமும், பெறுமா மக்கள் உயிர், உடமை, உரிமை ஆகியவைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பான நிர்வாகத்துறையின் பணியாகும்.

**5) நாட்டின் பாதுகாப்பு பணி:**

நாட்டின் பாதுகாப்பு நிர்வாகத்துறையின் பொறுப்பு ஆகும். நாட்டின் எல்லையோரப் பகுதிகளை பிறநாடு ஆக்கிரமிப்பு செய்யாமல் கண்காணிக்க வேண்டும். பிற நாடுகளின் ஆக்கிரமிப்பால் நாட்டுமக்களின் உயிரும், உரிமையும், உடமைகளும் பறிபோகாமல் பாதுகாப்பது நிர்வாகத்துறையே ஆகும். இந்தக் கடமையைச் செய்வதற்காகவே அரசு தோற்றுவிக்கப்பட்டது. நாட்டின் ராணுவத்தை உருவாக்குவதும், அதனை நிர்வகிப்பதும் நிர்வாகத்துறையே ஆகும். தரைப்படை, விமானப்படை, கடற்படை என முப்படைகள் உள்ளன. இந்தப் படைகளின் தலைமைத் தளபதியாகச் செயல்படுபவர் நிர்வாகத்துறைத் தலைவரே ஆவார்.

**6) அயலுறவுப் பணிகள்:**

தற்கால சூழ்நிலையில் எந்த நாடும் தனித்து இயங்க முடியாது. நாடுகளுக்கிடையே தொடர்பும், உறவும் அவசியமாகிறது. பிற நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகளையும், தொடர்புகளையம் கண்காணிப்பது நிர்வாகத் துறையின் பணியாகும். பிற நாடுகளும் வாணிக ஒப்பந்தங்கள், பாதுகாப்பு உடன்படிக்கைகள். நான் உடன்படிக்கைகள், கலாச்சார பரிவர்த்தனை ஆகிய பணிகளைக் கெர் வருவது நிர்வாகத்துறையே ஆகும்.

**<u>7) பொதுநலப் பணிகள்:</u>**

கல்வி, பொது சுகாதாரம், தொழிலாளர் நலன், முதியோர் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, நோயுற்றோர் பாதுகாப்பு, விவசாயம் போன்ற பல சமுதாய நலப் பணிகளை நிர்வாகத்துறை மேற்கொள்கிறது.

**<u>8) பொது நிர்வாக அலுவல்கள்:</u>**

பொதுத்துறை அலுவலர்களை நியமிப்பதும், அவர்களது பணிகளை ஒழுங்கு படுத்துவதும், பதவி உயர்வு அளிப்பதும், அதற்கான விதிகளை வகுப்பதும் நிர்வாகத் துறையின் பணிகளாகும்.

**<u>9) வளர்ச்சித் திட்டங்கள்:</u>**

சமுதாய முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, கல்வி, விவசாயம் ஆகியவற்றிற்கான வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டி பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெற்று செயல்படுத்து வது நிர்வாகத்துறையின் பணியாகும்.

**<u>10) நெருக்கடிக் காலப்பணிகள் :</u>**

Rஉள்நாட்டுக் குழப்பங்களாலும், வெளிநாட்டுப் படையெடுப்பு களாலும் நெருக்கடி நிலை ஏற்படும் போது நிர்வாகத் துறையின் பணிகள்

மேலும் விரிவுபடுத்தப்படுகின்றன. நாட்டின் பாதுகாப்புக்காகவும், அரசியலமைப்பைக் காக்கவும் நிர்வாகத்துறையினர் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றர். அவசர காலங்களில் அரசியலமைப்பின் உரிமைகளும் அடிப்படை உரிமைகளும், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகின்றன.

**<u>நிர்வாகத் துறைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுதல்:</u>**

**a) பரம்பரைக் கோட்பாடு முறை:**

பரம்பரைக் கோட்பாட்டின் அடிப்படையில் நிர்வாகத்துறைத் தலைவர் பதவியைப் பெறுவதுண்டு. இத்தகைய முறையை முடியாட்சி நாடுகளில் காணலாம். பரம்பரையாக நிர்வாகத்துறைத் தலைவர் பதவியை அடையும் அரசர் அல்லது அரசி தனது வாழ்நாள் முழுவதும் பதவியிலிருப்பர். அவருக்குப் பிறகு அவரது மகன் அந்தப் பதவியை அடைவார். இந்த மாதிரியான மன்னராட்சி முறை ஒரு சில நாடுகளில் உள்ளது. இங்கிலாந்தில் அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சி முறை உள்ளது.

**<u>b) நேரடியான தேர்தல் முறை:</u>**

நிர்வாகத்துறைத் தலைவரை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை குடியாட்சிக்கு ஏற்புடையதாகவும், மக்களின் இறைமையை, வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. இந்த முறையில் மக்களின் உரிமை மதிக்கப்படுகிறது. பிரான்ஸ் நாட்டின் குடியரசுத் தலைவர் வயதுவந்தோர் வாக்குரிமைப்படி ஏழு ஆண்டுகளுக்கு மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். சுவிட்சர்லாந்தின் மாநிலங்களான கேன்டன்களின் நிர்வாகத்துறைத் தலைவர்களும், அமெரிக்காவில் மாநிலங்களின் ஆளுநர்களும், லத்தீன் அமெரிக்க நாடுகளின் நிர்வாகத் தலைவர்களும் மக்களால் நேரடியாகத் தேர்தெடுக்கப்படுகின்றனர்.

**<u>c) மறை முகத் தேர்தல் முறை:</u>**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள் அடங்கிய தேர்வாளர் குழு (Electoral college) நிர்வாகத் துறைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறைக்கு மறைமுகத் தேர்தல் என்று பெயர்.) அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார் அமெரிக்க மக்கள் குடியரசுத் தலைவரைத் மதாநதெடுக்கும் தேர்வுக் குழு உறுப்பினர்களைத் தான் தேர்ந்தெடுப்பவர்.

**<u>d) சட்டமன்றங்களால் தேர்ந்தெடுக்கும் முறை:</u>**

சுவிட்சர்லாந்தின் நிர்வாகத்துறையினர் - தேசியப் பாராளுமன்றத்தின் இரு சபைகளாலும் அவற்றின் இணைப்புக் கூட்டம் ஒன்றில் நான்கு ஆண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்தியாவின் குடியரசுத்தலைவர், பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்களாலும், மாநில சட்டமன்றங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**<u>e) நியமன முறை:</u>**

சில நாடுகளில் நிர்வாகத் துறைத் தலைவர்கள் நியமன முறையிலும் பதவிகளை அடைகிறார்கள். கனடா. ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் நிர்வாகத் தலைவர்கள் இங்கிலாந்து அரசியால் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

**<u>பாராளுமன்ற நிர்வாக துறையின் தன்மைகள்:</u>**

1.பெயரளவு நிர்வாக துறை

2.உண்மை நிர்வாக துறை

3.தலைமை அமைச்சரின் சிறப்பிடம்

4.கட்சி அரசாங்கம்

5.நிர்வாகத் துறையும் சட்டத் துறையும் இணைந்து செயல்படுதல்

6.சட்ட மன்றத்திற்கு அமைச்சரவையின் பொறுப்பு

7.அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு

8.அரசியலில் ஒருமித்த தன்மை

9.எதிர்க்கட்சிகள்

**<u>பாராளுமன்ற நிர்வாகத் துறையின் நன்மைகள்:</u>**

1)சட்டமன்றமும் நிர்வாகத்துறையும் இணக்கமான முறையில் நடந்து கொள்கின்றன. இதனால் நிர்வாகத் துறையினர் கொண்டுவரும் தீர்மானங்கள், மசோதாக்கள் சட்ட மன்றத்தால் மிக எளிதாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. எனவே சட்டமன்றத்திற்கும் நிர்வாகத்துறைக்கும் முரண்பாடுகளோ, பிணக்குகளோ, பூசல்களே ஏற்படுவதில்லை .

**<u>2) மக்களின் இறைமை மதிக்கப்படுகிறது.</u>**

இங்கு பாராளுமன்ற உறுப்பினால் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அவர். இந்த பிரதிநிதிகளின் ஒரு குழு அமைச்சரவையாக அமைந்து நாட்டின் ஆட்சியை நடத்துகிறது. இதனால் பொது மக்களின் கருத்துக்கள் பாராளுமன்றத்தில் பிரதிபலிக்கின்றன.

**<u>3) நெகிழ்வுடைமை:</u>**

பாராளுமன்ற நிர்வாகத் துறை - நெகிழ்வுத் தன்மை கொண்டாதாகவும், சூழ்நிலைகளின் அவசியத்திற்கேற்ப எளிதில் மாறி அமையக்கூடியதாகவும் உள்ளது. அவசர காலத்திற்கேற்பவும்; நெருக்கடிகல நிலைக் கேற்பவும் வளைந்து கொடுக்கும் தன்மையைப் பாராளுமன்ற - முறையில் காணலாம்.

**<u>4) கூட்டுப் பொறுப்பு:</u>**

தனது கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு நேரடிப் பொறுப்பானது ஆகும். இது

மறைமுகமாக வாக்காளர்களுக்கு பொறுப்பாகிறது. இது பாராளுமன்ற நிர்வாக முறையின் நன்மையாகும்

**5) எதிர்க்கட்சிக்கு முக்கிய இடம்:**

பாராளுமன்ற நிர்வாகத்துறை ஆட்சி முறையில் எதிர்கட்சிகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. எதிர்கட்சிகள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும், கொள்கைகளையும் கவனித்து வருகிறது. குறைகளைச் சுட்டிக் காட்டுகிறது. இந்த எதிர்கட்சியின் கருத்துக்கு மதிப்பளித்து அரசாங்கம் செயல்படுகிறது. எதிர்கட்சித் தலைவருக்கு அமைச்சருக்குரிய அந்தஸ்துகொடுக்கப்படுகிறது.

**6) குடியாட்சி நெறிப்படுத்தப்படுகிறது:**

பாராளுமன்ற நிர்வாகத் துறையில் குடியாட்சி முறை நெறிப்படுத்தப்படுகிறது. பாராளுமன்ற முறை அரசு நிலவும் நாட்டு அரசாங்கம் குடியாட்சி அரசாங்கம் என்று கருதப்படுகிறது. அரசாங்கத்தின் தலைவர் மக்களின் தலைவராகவே விளங்குகிறார். இங்கிலாந்தில் பாராளுமன்ற குடியாட்சி முறை செல்வாக்கு பெற்றுள்ளது.

**7) அரசியல் அறிவு:**

பாராளுமன்ற நிர்வாக முறை நிலவும் நாடுகளில் அரசியல் கட்சிகள் மக்களிடம் அணுகி தங்கள் கொள்கைகளையும் திட்டங்களையும் விளக்கிகூறி மக்களின் ஆதரவைப் பெற முயற்சி செய்கின்றன. இவ்வாறு மக்களிடம் அரசியல் கொள்கைகளும் திட்டங்களும் விளக்கிக் கூறப்படுவதால் மக்களுக்கு அரசியல் அறிவு வளர்கிறது.

**பாராளுமன்ற நிர்வாகத் துறையின் குறைகள்:**

**1) அதிகாரக் குவிப்பு:**

பாராளுமன்ற நிர்வாகத் துறையில் சட்டமன்றத்திற்கும் நிர்வாகத்துறைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால் அதிகாரக் குவிப்பு நிலவுகிறது.

**2) கட்சி அரசாங்கம்:**

பாராளுமன்ற நிர்வாகத் துறை கட்சிகளின் அடிப்படையில் இயங்கும் அரசாங்கமாகும். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற கட்சியினரே ஆட்சியை நடத்துகின்றனர்.

**3) நிலையில்லா அரசாங்கம் :**

பாராளுமன்ற முறையிலான நிர்வாகத்துறையில் அரசாங்கம் உறுதியற்றதாக இருக்கிறது. ஏனெனில் அமைச்சரவை பதவியிலிருக்கக் காலம் வரையறுக்கப்படவில்லை. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும் வரையில்தான் பதவியில் இருக்க முடியும்.எவே அமைச்சரவைக்கு எப்போதும் ஆபத்து இருந்து கொண்டேயிருக்கும்.

**4) திறமையில்லாத நிர்வாகம்:**

நிர்வாகத்தின் பலதுறைகளுக்கும் பொறுப்பேற்கும் அமைச்சர்கள் அரசாங்கத்தைப் பற்றிய முன்னறிவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். பொதுத்துறை அலுவலர்களின் ஆலோசனையின் படியே துறை நிர்வாகத்தை நடத்துகின்றனர். பொது விழாக்களில் கலந்து கொண்டும் தங்கள் நேரத்தை செலவிடுகின்றனர். இதன் காரணமாக பாராளுமன்ற நிர்வாகம் திறமையற்றுக் காணப்படுகிறது.

**5.எதிர்கட்சிகளின் எதிர்ப்பு:**

நிர்வாகத்துறையினர் எடுக்கும் நடவடிக்கையெல்லாம் எதிர்க்கின்றனர். திட்டங்களை செயல்படுத்த விடாமல் எதிர்க்கின்றனர். இதனால் தேவையற்ற பிரச்சனைகளும்,காலவிரயமும், குழப்பமும் ஏற்படுகின்றது.

**6. விரைந்து செயல்படாத தன்மை:**

எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவும் சக அமைச்சர்களையும், கட்சித்தலைமையையும் கலந்து ஆலோசித்த பின்னரே எடுக்க முடியும். இதனால் கொள்கை முடிவுகள் எடுப்பதிலும், அதைச் செயல்படுத்துவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது.

**7.சட்டமன்றத்தின் அதிக செல்வாக்கு :**

பாராளுமன்ற நிர்வாகத் துறை அரசாங்கத்தில் பாராளுமன்றத்தில் செல்வாக்கு அதிகரித்து நிர்வாகத்துறை பாராளுமன்றத்திற்கு அடிமையாகி கிடக்கிறது. நிர்வாகத்துறையால் சுதந்திரமாகச் செயல்பட முடிவதில்லை . பாராளுமன்றம் அதிக வல்லமையுடையதாகவும், இறைமை அதிகாரம் கொண்டதாகவும் உள்ளது.

**தலைவர் முறை நிர்வாகத்துறை (Presidential Executive)**

நிர்வாகத்துறைக்கும் சட்டத்துறைக்கும் நெருங்கிய உறவில்லாமல் தனித்து இயங்கும் நிர்வாகத்துறைக்கு தலைவர் முறை நிர்வாகத்துறை என்ற பெயர். தலைவர் முறை நிர்வாகத் துறைக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நிர்வாகத் துறை சிறந்த எடுத்துக் காட்டு ஆகும்.

தலைவர் முறை நிர்வாகத் துறையுள்ள நாட்டில் குடியரசுத் தலைவரை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

**தலைவர் முறை நிர்வாகத்துறையின் தன்மைகள் :**

**1.அதிகாரப் பிரிவினை** :

நிர்வாகத்துறையின் தலைவரான குடியரசுத்தலைவர் தனது அதிகாரங்களை அரசியலமைப்பிலிருந்தே பெறுகிறார். இவர் பாராளுமன்றத்தின் தலையீடு இல்லாமல் சுதந்திரமாகச்

செயல்படுவதால் பாராளுமன்றத்திற்கும், குடியரசுத் தலைவருக்குமிடையே அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு முழுமையாகச் செயல்படுகிறது.

**2.நாட்டின் தலைவரே அரசாங்கத்தின் தலைவர்:**

தலைவர் முறை நிர்வாகத்துறையில் நாட்டின் தலைவரே அரசாங்கத்தின் தலைவராகவும் இருக்கிறார். சட்டப்படியாகவும், கடைமறையிலும் எல்லா அதிகாரங்களையும் இவரே கொண்டுள்ளார். உண்மை நிர்வாகத்துறையென்றும் பெயரளவு நிர்வாகத்துறையென்றும் வேறுபாடு கிடையாது.

**3.குடியரசுத் தலைவரின் பதவிக்காலம்:**

தலைவர் முறை நிர்வாகத்துறை அரசாங்கத்தில் (கடியாகக் தலைவரின் பதவிக்காலத்தை பாராளுமன்றம் குறைக் பாராளுமன்றத்தில் குடியரசுத் தலைவரின் கட்சிக்கு வரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தலைவரின் பதவி பாதிக்கப்படாது. துரோகக் குற்றச்சாட்டு தலைவரை பதவி நீக்கம் செய்ய முடியும்.

**4.சட்டநடவடிக்கைகளில் பங்கேற்காமை:**

நிர்வாகத்துறைத் தலைவரான குடியரசுத் தலைவரும், அவரது அமைச்சர்களும் நிர்வாகச் செயலில் மட்டும் ஈடுபடுகிறார்கள்.

**<u>தலைவர் முறை நிர்வாகத்துறையின் நன்மைகள் :</u>**

**1) வலிமைமிக்க நிர்வாகத்துறை:**

தலைவர் முறை நிர்வாகத் துறையில் குடியரசுத் தலைவர் அதிக அதிகாரங்களுடன் ஒரு வலிமை மிக்க தலைவராக உள்ளார். அவரே நாட்டின் தலைவராகவும், நிர்வாகத்தின் தலைவராகவும் விளங்குகிறார். எனவே உண்மை நிர்வாகத்துறை, மற்றும் பெயரளவு நிர்வாகத்துறை அதிகாரங்களும் குடியரசுத்தலைவரிடமே குவிந்துள்ளன.

**2) திறமைமிக்க அமைச்சர்கள் :**

குடியரசுத் தலைவர் தனது அமைச்சர்களை நியமிக்கும் போது அனுபவம் மிக்கவர்களாகவும், திறமை மிக்கவர்களாகவும் பார்த்து நியமிக்கிறார். இதனால் நாட்டின் நிர்வாகம் திறமையாக இயங்குகிறது.

**3) செயல்திறமை:**

குடியரசுத் தலைவர் முப்படைகளின் தளபதி ஆகையால் போர் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடிகிறது. இவ்வாறு தலைவர் முறை நிர்வாகத்துறையில் குடியரசுத் தலைவர் செயல்திறமை மிக்கவராக விளங்குகிறார்.

**4) பாராளுமன்றம் சுதந்திரமாகச் செயல்படுகிறது:**

தலைவர் முறை நிர்வாக முறையில் பாராளுமன்றம் சுதந்திரமாகச் செயல்பட முடிகிறது. ஏனெனில் நிர்வாகத்துறையின் தலையீடு, குறுக்கீடு இல்லை. இங்கே பாராளுமன்றத்தில் சட்டங்கள் கட்சி அடிப்படையில் நிறைவேற்றப்படுவது இல்லை.

**5) நிர்வாகத் துறையின் சுதந்திரம்:**

சட்டமன்றங்களே சட்டமியற்றும் பணிகளைக் கவன

உதலைவரோ அவரது அமைச்சர்களோ கொள்வதால், குடியரசுத் தலைவரோ அவரது அ மசோதாக்களை திட்டமிடவோ உருவாக்கவோ வேண்டி எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பதைக் மசோதாக்கள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின் கண்காணிக்கவும் வேண்டியதில்லை.

**6.பல இன மக்கள் வாழும் நாடுகளுக்கு ஏற்றது:**

அரசாங்கமே உறுதியானதாக உள்ளது. இதனால் பல இனமக்கள் வாழும் நாட்டிற்கு தலைவர் முறை நிர்வாக முறையே ஏற்றது ஆகும்.

**7) அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு:**

தலைவர் முறை அரசாங்கத்தில் அதிகாரப்பிரிவினைக் கோட்பாடு பின்பற்றப்படுகிறது. இங்கு நிர்வாகத்துறையின் வல்லாட்சி இல்லை. சட்டமன்ற நடவடிக்கைகளில் நிர்வாகத்துறை தலையிடுவதும் இல்லை.

**தலைவர் முறை நிர்வாகத்துறையின் குறைகள்:**

**அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டால் ஏற்படும் குறைகள்:**

இதனால் சட்டத்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும் இடையே அடிக்கடி முரண்பாடுகளும் பூசல்களும் ஏற்படுகிறது.இது நாட்டிற்கு நல்லதல்ல.

**2) காலதாமதம் ஏற்படுகிறது:**

தலைவர் முறை நிர்வாகத்துறையில் துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலுவதில்லை. அவசர நடவடிக்கைகள் தேவைப்படும் காலங்களில் கூட உடனடியாக முடிவு எடுக்க தாமதம் ஏற்படுகிறது. இது நாட்டிற்கு பல தீங்குகளை ஏற்படுத்துகிறது.

**3) சட்டமியற்றுவதில் ஒருமைப்பாடு இல்லை :**

பாராளுமன்ற உறுப்பினர்களே அரசாங்க நடைமுறைக்குத் தேவைப்படும் மசோதாக்களைத் தயாரித்து சமர்ப்பிக்கின்றனர். இதனால் நாட்டிற்குத் தேவைப்படும் சட்டதிட்டங்களைத் தயாரிப்பதில் நிர்வாகத்துறைக்கும் சட்டத்துறைக்கும் மிடையே இணைக்கமும், ஒருமைப்பாடும் ஏற்படுவது இல்லை.

**4) வல்லாட்சி முறைக்கு வாய்ப்பு ஏற்படுகிறது:**

தலைவர் முறை நிர்வாகத்தில் வல்லாட்சி தோன்றும் வாய்ப்பு உள்ளது. குடியரசுத்தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதால் அவரது பதவிக்காலத்தில் யாரும் அவரைக் கட்டுப்படுத்தவோ, பதவியிலிருந்து நீக்கவோ முடியாது.

குடியரசுத்தலைவர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டாலும் கண்டிக்க முடியாது.

**5) தலைவர் தேர்தலில் கடும் போட்டி ஏற்படுகிறது.**

தலைவர் முறை நிர்வாகத்துறையில் குடியரசுத்தலைவருக்கு ஏராளமான அதிகாரங்கள் உள்ளன. அதிகாரக் குவிப்பைக் காணலாம். எனவே அதிகாரமும் வலிமையும் மிகுந்த இந்த பதவியை அடைய தேர்தலில் கடும் போட்டி ஏற்படுகிறது. மக்களிடையே ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டு பெரும்பிளவு ஏற்படுகிறது. இதனால் நாட்டில் கலகங்களும், புரட்சிகளும் கூட ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**பாராளுமன்ற நிர்வாகத்துறைக்கும் தலைவர் முறை நிர்வாகத் துறைக்கும் உள்ள வேறுபாடுகள் :**

1)பாராளுமன்ற நிர்வாகத்துறையில் உண்மை நிர்வாகத்துறையும், பெயரளவிற்கான நிர்வாகத்துறையும் உண்டு. நாட்டின் தலைவர் வேறு. அரசாங்கத்தின் தலைவர் வேறு. ஆனால் தலைவர் முறை நிர்வாகத்துறையில் ஒரே நிர்வாகத்துறைதான் உண்டு. நாட்டின் தலைவரும், அரசாங்கத்தின் தலைவரும் ஒருவரே.

2)பாராளுமன்ற முறையில் உண்மை நிர்வாகத்துறையான அமைச்சரவையின் பதவிக்காலம் பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது. பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறும் வரை தான் அமைச்சரவை பதவியிலிருக்க முடியும் ஆனால் தலைவர் முறையில், குடியரசுத்தலைவரின் பதவிக்காலம் பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படுவதில்லை. பாராளுமன்றத்தின் நம்பிக்கையை இழந்தாலும் தலைவர் தனது பதவியை இழக்க வேண்டியதில்லை.

3)பாராளுமன்ற முறையில் சட்டமன்றங்களைக் கலைப்பதற்கு நிர்வாகத்துறையால் முடியும். ஆனால் தலைவர் முறையில் குடியரசுத்தலைவர் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

4)பாராளுமன்ற முறையில் நிர்வாகத் துறைக்கும், சட்டமன்றங்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு உண்டு. ஆனால் தலைவர் முறையில் நெருங்கிய தொடர்பு இல்லை.

5)பாராளுமன்ற முறையில் தலைமை அமைச்சரும் இதர அமைச்சர்களும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள். தலைவர் முறையில் குடியரசுத்தலைவரோ அவரது அமைச்சர்களோ பொறுப்புடையவர்கள் அல்ல.

6)பாராளுமன்ற முறையில் அமைச்சரவை பாராளுமன்றத்திற்குக் கூட்டுப் பொறுப்புடையது. ஆனால் தலைவர் முறையில் அமைச்சர்கள் குடியரசுத்தலைவருக்கு கீழ்பட்டவர் ஆவார் பாராளுமன்றத்திற்கு கூட்டுப் பொறுப்பு இல்லாதவர்கள்.

**<u>அதிகாரப்பிரிவினை</u>**

நாட்டின் மூன்று நிர்வாகப் பிரிவுகளான சட்டமன்றம், நிர்வாகத்துறை, நீதிதுறை ஆகியவைகளின் அதிகாரங்கள் ஒரு நபரிடமோ அல்லது ஒரு குழுவிடமோ குவிக்கப்படாமல் தனித்தனி அமைப்புகளின் கீழ் பிற துறைகளின் தலையீடு இல்லாமலும், சுதந்திரமாகவும், இயங்குவதை வலியுறுத்துவதுதான் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடாகும். அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டிற்கு முதன் முதலாக சரியான வடிவமும் விளக்கமும் கொடுத்தவர் பிரான்ஸ் நாட்டின் அரசியல் அறிஞரான மாண்டஸ்க்யூ (Montesquieu) என்பவராவார்.

**<u>மாண்டஸ்க்யூவின் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு:</u>**

மாண்டஸ்க்யூ பிரான்ஸ் நாட்டின் அரசியல் அறிஞர், இவர் பதினான்காம் லூயி காலத்தில் வாழந்தவர். அப்போது பிரான்ஸ் நாட்டில் அரசனேசர்வ அதிகாரங்களையும் பெற்றிருந்தான் பிரஞ்சு சட்டமன்றமும் நீதித்துறையும் செயலிழந்து காணப்பட்டது.மன்னரின் கொடுங் கோலாட்சி தலைவிரித்தாடியது. மக்கள் உரிமைகள்

இல்லாமல் அடிமை போல் வாழ்ந்து வந்தார்கள். மொத்தத்தில் பிரான்ஸ் நாட்டில் சர்வாதிகாரம் நிலவியது. இச்சூழ்நிலையில் தான் மாண்டஸ்க்யூ இங்கிலாந்து நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கு அரசாங்கப் பிரிவுகள் எப்படி செயல்படுகின்றன என்று நேரில் கண்டுணர்ந்தார்.

UNIT-IV

# சட்ட சபையின் பணிகள்:

1) **சட்டம் இயற்றுதல்:**

சட்டம் இயற்றுதல் சட்டசபையின் முக்கியமான பணியாகும்.. தேவைக்கேற்ப புதிய சட்டங்கள் இயற்றப்படுகின்றன. வளரும் சேர்ப பழைய சட்டங்கள் திருத்தப்படுகின்றன. பயனற்ற சட்டங்கள் நீக்கப்படுகின்றன.

**2) நாட்டின் நிதியைக் கண்காணித்தல் :**

சட்டசபைக்கு வரிவிதிக்கவும், அரசின் வரவு செலவுகளை பரிசீலனை செய்யவும் உரிமை உண்டு. பரிசீலனை செய்து அதை அனுமதிப்பதன் மூலம் நாட்டின் நிதியை கண் காணிக்கிறது. ஐந்தாண்டுத்திட்டங்கள் போன்ற பெரிய தேசியத் திட்டங்களுக்கு சட்டசபையின் அனுமதி அவசியமாகிறது..

**3) நாட்டின் நிர்வாகத்தைக் கண்காணித்தல்:**

அமைச்சரவையின் கொள்கைபற்றியும், நிர்வாகத்துறை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் பாராளுமன்ற உறுப்பினர் கேள்வி கேட்கவும், விவாதம் செய்யவும் உரிமை உண்டு. இந்த கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டிய கடமை நிர்வாகத்துறையினருக்கு உண்டு. சபையின் விருப்பங்களுக்கு இணங்காத அமைச்சர்கள் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வர சபைக்கு உரிமை உண்டு. நம்பிக்கையில்லாத தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நிர்வாகத்துறை பதவி விலக வேண்டும்.

**4.நீதி செலுத்தும் அதிகாரம்: Judicial Powers**

இந்தியப் பாராளுமன்றத்திற்கு குடியரசுத் தலைவர் மீதான தேசத்துரோகக் குற்றங்களை விசாரிக்கும் உரிமை உண்டு. இவ்வாறு சட்டசபைகள் நீதி செலுத்தும் பணிகளையும் செய்து வருகின்றது.

**5) தேர்தல் பணி:**

சட்ட சபைகள் தேர்தல் பணியும் செய்கின்றன. இந்தியாவில் எல்லா மாநில சட்ட சபைகளின் உறுப்பினர்கள் மூலமே குடியரசுத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**6) அரசியலமைப்பு நிர்ணய சபையாக செயல்படுதல்:**

இந்திய பாராளுமன்றத்தில் வந்திருந்து மூன்றில் இருபங்கு பெரும்பான்மையுடன் அரசியல் அமைப்பு திருத்தங்கள்

நிறைவேற்றப்படுகிறது. இவ்வாறு சட்டமன்றங்கள் அரசியல் நிர்ணய சபையின் பணிகளையும் செய்கின்றன.

**7) பொதுமக்கள் அபிப்பிராயத்தை வெளியிடுதல்:**

சட்டசபையின் உறுப்பினர்கள் தங்கள் தொகுதியிலுள்ள மக்களுடைய குறைபாடுகளையும், முறையீடுகளையும் சட்டசபையில்

வெளியிடுகின்றனர். இதனால் சட்டசபை மக்களுடைய குறைபாடுகளை வெளியிடும் இடமாக அமைந்துள்ளது. மக்களின் முறையீடுகளைக் கவனித்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறையும் சட்டசபை வகுக்கிறது.

**8) திட்டப்பணிகள்:**

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் தீட்டப்படும் திட்டங்களை ஏற்பதிலும், அவைகளை நடைமுறைப் படுத்துவதிலும் சட்டசபைகள் பங்கு பெறுகின்றன. தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிக்கவும், அவைகளை நாட்டுடமையாக்கவும் சட்டம் இயற்றுகின்றன. பொது நிறுவனங்களைக் கண்காணிக்கிறது. மேலும் அரசு முதலீடு செய்துள்ள துறைகளிலும், ரயில்வே, தபால் மற்றும் தந்தி துறைகளிலும் சட்டசபைகள் கவனம் செலுத்துகின்றன.

**9) விசாரணைப்பணி: -**

விசாரணைக் குழுக்களையும், ஆயவுக மன்றங்களே நியமனம் செய்கின்றன. நாட்டின் அறியவும், உயர் கல்வி நிலையை அறியவும், பயிர் கொள்ளவும் அவ்வப்போது குழுக்கள் நியம் அந்தந்த துறைகளில் தீவிர விசாரணை செய்து அறமூக்களையும், ஆய்வுக் குழுக்களையும் சட்ட செய்கின்றன. நாட்டின் தொழில் நிலையை நலையை அறியவும், பயிர் தொழில் பற்றி அறிந்து போது குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கின்றன. அந்த அறிக்கைகள் சட்ட மன்றத்தில் விவாதிக்கப்பட்டு மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அந்த அறிக்கையின் அடிப்படையில் சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

**10) ஆட்சித்துறைப்பணி**

ஆட்சித்துறை அலுவல்கள், பொதுத்துறை அலுவல்கள் பற்றிய சட்டத்திட்டங்களையும் விதிமுறைகளையும் சட்டமன்றங்கள்.

செய்கின்றன. பொதுத்துறை அமைப்பை வகுத்து அலுவலர்களின் பணிகளையும் அதிகாரங்களையும் அலுவலர்களிடையே இருக்கும் பணிகளையும் தீர்மானிக்கிறது. அலுவலர்களின் ஊதியங்கள், படிகள், ஓய்வுகால ஊதியங்கள் ஆகியவற்றிக்கான மானியங்களை வழங்குகிறது.* பொதுத்துறை அலுவலில் புதிய பதவிகளைத் தோற்றுவிப்பதிலும் சட்டமன்றத்திற்குப் பங்கு உண்டு.

**சட்ட சபையின் அமைப்பு: (Organisation of Legislature)**

அரசாங்கத்தின் முப்பெரும் நிறுவனங்களில் முக்கியமானது சட்டமன்றம் ஆகும். சட்டமன்றத்தின் அமைப்பில் நாட்டிற்கு நாடு வித்தியாசம் காணப்படுகிறது. மக்களாட்சி நடைபெறுகின்ற அனேக நாடுகளில் இரண்டு சபைகளைக் கொண்ட சட்டமன்றங்கள் அமைந்துள்ளன. இந்தியாவில் பாராளுமன்றத்தில் மக்கள் சபை என்றும். ராஜ்ய சபை என்றும் இரண்டு சபைகள் உள்ளன.

**ஓரவை சட்ட மன்றம்:**

ஒரு நாட்டின் சட்டமன்றத்தில் ஓரவை மட்டும் இருக்குமானால் அது 'ஓரவை சட்டமன்றம்' என்று அழைக்கப்படுகிறது. மக்களின் இறைமை கொள்கையின் அடிப்படையில் ஓரவை சட்டமன்றங்கள் செல்வாக்கு பெற்றுள்ளன. இறைமை என்பது பிரிக்க முடியாதது ஆகும். எனவே இறைமை இரண்டு சபைகளுக்குப் பிரித்துக் கொடுக்க முடியாது. மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓரவை மக்களுக்குப் பொறுப்புடையதாக இருக்கும்.

ஓரவை உள்ள சட்டமன்றத்தை இங்கிலாந்தின் அரசியல் அறிஞர் ஜெராமி பென்தாம் என்பவரும், அமெரிக்க அரசியல் அறிஞரான அபிசியே என்பவரும் ஆதரிக்கின்றனர். இவர்கள் ஓரவையுள்ள

சட்டமன்றமே மக்களின் எண்ணத்தையும் விருப்பதையும் காட்டக் கூடியதாக அமைகிறது என்று கருதுகின்றனர்.

**<u>ஓரவைட சட்டமன்றத்தின் நன்மைகள்:</u>**

ஓரவை சட்டமன்ற முறை மிக எளிமையான முறையாகும். மக்களின் கருத்துக்கள் அனைத்தையும் ஒரே மன்றத்தில் தெரிவிக்க முடிகிறது. மக்களின் இறைமை பிரிக்கப்பட முடியாது. ஈரவை சட்டமன்றத்தில் தோன்றும் முரண்பாடுகளும் பிரச்சனைகளும் ஓரவை சட்டமன்றத்தில் தடுக்கப்படுகின்றன.

சட்டமியற்றுவது என்ற ஒரே வேலையை இரண்டு முறை ச வேண்டியதில்லை. இதனால் காலதாமதங்கள் தவிர்க்கப்பட்டு சட்டம் இயற்றுதல் விரைவில் நடைபெறும். இருக்கும் சிறிய நாடுகளுக்கும், புதிய நாடுகளுக்கும் ஓரவை முறை -- மிகவும் பொருத்தமுடையது ஆகும்.

**<u>ஓரவை சட்டமன்றத்தின் குறைகள்:</u>**

a) ஓரவையிலுள்ள பெரும்பான்மைக் கட்சியினர் அதிக ஆதிக்கம் செலுத்த நேரிடும். ஏதேச்சதிகாரமாக தாங்கள் எடுக்கும் முடிவுகளை மக்கள் மீது திணிக்க முயலுவர். இதனால் பெரும்பான்மைக் கட்சியினரின் சர்வாதிகாரம் ஏற்பட வழிவகுக்கிறது. -

b)ஓரவை சட்டமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்கள் தீவிரவாதத் தன்மையுடையனவாக உள்ளது. காரணம் முற்போக்கு கருத்துக்கள் என்ற போர்வையில் முன்யோசனையில்லாத, தீங்கு விளைவிக்கக் கூடிய சட்டங்கள் இயற்றப்படலாம். இதனால் மக்கள் நலன்கள் பாதிக்கப்படும்.

C) பிரச்சனைகள் மிகுந்த, புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தும் மசோதாக்கள் - நான்கு ஆராயப்படாமலும் நிதானமில்லாமலும் நிறைவேற்றப்படலாம். -

தற்போது நியுசிலாந்து, டென்மார்க், பின்லாந்து போன்ற ஒரு சில நாடுகளில் மட்டுமே ஓரவை சட்டமன்றம் உள்ளது.

**ஈரவைச் சட்டமன்றம்:**

சட்டமன்றத்தில் கீழ்சபை, மேல்சபை என்று இரண்டு சபைகள் அதனை ஈரவைச் சட்டமன்றம் என்று கூறுகிறோம். தற்காலத்தில் பலநாடுகளில் ஈரவைச் சட்டமன்ற முறையே அதிகமாக இங்கிலாந்தில் ஈரவை முறை நீண்ட காலமாகவே காணப்படுகிறது. இங்கிலாந்தில் ஈரவை முறை நீகெ. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா, பிரான்ஸ்..

பான்ற நாடுகளில் இரண்டு அவைகள் உள்ளன. **சட்டமன்றத்தின் கீழ்சபையின் அமைப்பு:**

பொதுவாக சட்டமன்றத்தின் கீழ்க வாக்காளர்களால் நேரடியாகத் தேர்வைகாக சட்டமன்றத்தின் கீழ்சபை உறுப்பினர்கள் வாகன

யாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.உறுப்பினர்கள் மக்கள் தொகையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதற்காக நாடு பல தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. பெரும்பான்மைவாக்குகள் பெற்றவரே தேர்தெடுக்கப்படுகிறார். பொதுவாக ஐநூறு பிரதிநிதிகள் அடங்கிய சபையே அரசியல் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்தியாவின் கிழ்சபையில் உறுப்பினர்களும்,இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் கீழ்சபை ஐந்து ஆண்டும் காலத்திற்கு, தேர்ந்தெடுக்கப்படுகிறது. கீழ்சபையின் பதவிக் காலம் நிரந்தரமற்றது ஆகும்.

**<u>சட்டமன்றத்தின் மேல்சபையின் அமைப்பு: .</u>**

சட்டமன்றத்தின் மேல்சபை பொது வாக பரம்பரை முறை, நியமனமுறை, தேர்தல் முறை - போன்ற அடிப்படைகளில் அமைக்கப்படுகிறது. மேல்சபை நிரந்தரமான சபையாக உள்ளது. மேல்சபையில் அரசியல்வாதிகள் சிறுபான்மையினர், தொழில்

வல்லுனர்கள், உற்பத்தியாளர்கள், கல்வி, கலை, அறிவியல் சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்து விளங்குபவர்கள் ஆகிய அனைவருக்கும் பிரதி நிதித்துவம் அளிக்கப்படுகிறது. மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை கீழ் சபையின் எண்ணிக்கையை விட குறைவாக இருக்க வேண்டும். பாதியாக இருப்பது நல்லது. இந்திய மேல் சபையான ராஜ்ய - சபாவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 250 ஆகும்.

**இரண்டு சபைகள் அவசியமா?**

சட்டமன்றத்தின் கீழ்சபையில் கொண்டுவரப்படுகிற மசோதா, நிறைவேற்றப்படுவதற்கான பல நிலைகளைக் கடந்து இறுதியில் சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. கிழ்சபையில் நிறைவேற்றப்பட்ட மசோதா மேல்சபைக்கு கொண்டு வரப்பட்டு அங்கும் பெரும்பான்மை உறுப்பினர்களால் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். ஒரு மசோதா மேல் சபையிலோ அல்லது கீழ்சபையிலோ கொண்டுவரப்படுவதற்கான வழிமுறைகள் அரசியல் அமைப்பிலேயே சொல்லப்பட்டுள்ளன. மேல்சபையில் அறிமுகப்படுத்தப்படும் மசோதாவும் அங்கு நிறைவேறிய பின்பு, கீழ்சபையிலும் நிறைவேற்றப்பட வேண்டும். நிதிமசோதாக்கள் கீழ்சபையில்தான் அறிய. வேண்டும். கீழ்சபை ஒரு நிதி மசோதாவை ஒப்புக் கொ சபைக்கு அதை மறுக்கும் உரிமை கிடையாது.

இவ்வாறு நிதி மசோதாவைத் தவிர இதர மசோதாக்களை நிறைவேற்றுவதில் இரு சபைகளும் ஒரே முறையைப் பின்பற்றுவது இரண்டு சபைகள் அவசியமில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் நடைமுறையில் இரண்டு சபைகள் தேவை என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட வருகிறது.

**ஈரவை சட்ட மன்றத்தின் நன்மைகள்**

**1) ஆளும் கட்சியின் வல்லாட்சி கட்டுப்படுத்தப்படுகிறது:**

சட்டம் இயற்றும் அதிகாரம் எல்லாம் ஒரே சபைக்கு மட்டும் கொடுக்கப்பட்டால், ஆளும் கட்சி தனது அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்தும். ஆணவத்துடன் நடந்து கொண்டு வல்லாட்சி ஏற்பட வழிவகுத்துவிடும். ஊழல் மலிந்து விடும். ஓரவையில் சட்டமியற்றும் அதிகாரக் குவிப்பு அந்த அவையை வல்லாட்சி வழியில் கொண்டு எரி செல்கிறது இவ்வாறு ஓரவை சட்டமன்றம் தனது அதிகார வரம்பை மீறாமல் தடுக்க இரண்டாவது சபை அவசியமாகிறது.

**2) நன்றாக சிந்தித்து செயல்பட வாய்ப்பு கிடைக்கிறது:**

இளைஞர்களாகவும் அனுபவமில்லாதவர்களாகவும், தீவிரவாத முடையவர்களாவும் இருப்பர். அவர்கள் அதிக ஆர்வத்துடன் நிதானிக்காமலும், ஆலோசிக்காமலும், அதிவிரைவாகவும் சட்டங்கள் இயற்றுவர். இதனால் தீங்கு ஏற்படக்கூடும். இப்படிப்பட்ட மசோதாக்களை தடுத்து நிறுத்தி, அதைப்பற்றி சிந்திக்கச் செய்து அவசியமானால் அந்த மசோதாவை நிராகரிக்கவோ அல்லது மாற்றவோ மேல்சபை ஆலோசனை கூறுகிறது.

**3) கிழ்சபையின் வேலைப்பளுவையும் நேரத்தையும் குறைக்கிறது:**

சிக்கல்களும், பிரச்சனைகளும் இல்லாத மசோதாக்களை மேலவை தோற்றுவித்து முதலில் விவாதிக்கலாம். இது வேலைப்பளுவும், நேரமும் குறைகிறது.

**4) மேல்சபையின் நிரந்தரத்தன்மை:**

கிழ்சபையின் பதவிக்காலம் நான்கு அல்லது ஐந்து ஆண்டு முடிவடையும். அதற்கு முன்னதாகக் கூட கலைக்கப்படலாம். அதன் பதவிக் காலம் நிரந்தரமற்றது. இவ்வாறு மேல்சபை ஒரு நிரந்தர

சபையாக இருந்து மக்களின் கருத்துக்களைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது.

**5) சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவம்:**

இரண்டாம் அவையாக மேல்சபை இருப்பதால் சிறுபான்மை மக்களுக்கு பிரதி நிதித்துவம் கொடுக்க வசதியாக உள்ளது.இதனால் சிறுபான்மையினருக்கு பங்கு இல்லாமல் போய்விடுகிறது. குடியாட்ச்சி நடைபெறும் நாட்டில் சிறுபான்மையினர் நலன்கள் பாதுகாக்க பட வேண்டியதிருப்பதாலும் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டியதிருப்பதாலும் மேல் சபை அவசியமாகிறது.

**6) மேதைகளின் அரசியல் சேவைகளுக்கு வழி செய்யப்படுகிறது:**

கலைஞர்கள், அறிவியல், கல்வியாளர்கள், சமூக சேவகர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், வணிகர்கள் ஆகியோர்களுக்கு மேல் சபையில் இடமளிக்கலாம். நாட்டிற்கு சேவை செய்ய விரும்பும் .இந்தியாவில் மேல்சபையான ராஜ்ய சபாவில் குடியரசுத்தலைவர் கலை, கல்வி, அறிவியல், சமூக சேவை ஆகியவைகளின் அடிப்படையில் 12 பேரை நியமனம் செய்கிறார். இவ்வாறு மேல்சபை பல துறைகளிலும் உள்ள மேதைகளின் அரசியல் சேவைகளுக்கு வழிவகுக்கிறது.

**7) மசோதாக்கள் நல்ல முறையில் திருத்தம் பெறுகின்றன:**

மேல்சபை மசோதாக்களை நல்ல முறையில் திருத்தும் அவையாகப் பணியாற்றுகிறது. கீழ்சபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் குறைபாடு உடையனவாக அமையலாம். அவைகளில் ஒரு சில சட்ட நுணுக்கங்கள் விடுபட்டிருக்கலாம். எனவே தான் மேல் சபையானது. கீழ்சபை இயற்றிய மசோதாக்களில் உள்ள குறைபாடுகளை திருத்தியமைக்க உதவுகிறது.

**8) கூட்டாட்சி முறைக்கு மேல்சபை அவசியம் தேவை:**

கூட்டாட்சி அரசில் கீழ்சபைக்கு உறுப்பினர்கள் மக்கள் தொகையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எனவே பெரிய மாநிலங்களுக்கு அதிகப் பிரதிநிதிகளும், சிறிய மாநிலங்களுக்கு குறைவான எண்ணிக்கையில் பிரதிநிகளும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**9.மக்களின் சுதந்திரம் காக்கப்படுகிறது.**

இரண்டாவது சபை ஆளுகிறவர்கள் தங்களை தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ள வழி செய்கிறது. மேல் சபை அதிகாரத்தைச் சமநிலைப்படுத்த இரண்டாம் சபை அவசியமாகிறது. மேல் சபை இல்லையென்றால் கீழ்சபையின் அதிகாரங்களைக் கட்டுப்படுக்க மடியாமல் வல்லாட்சிப் போக்கிட வழி ஏற்படும்.

10) **நிர்வாகத்துறையின் உரிமை காக்கப்படுகிறது:**

ஓரவை மட்டுமே இருந்தால் குற்றம் சாட்டுவதும் விசாரிப்பதும் ஒரே சபையாக அமைந்து விடும். இதனால் நீதியின் நேர்மை குன்றி விடும். இரண்டு சபையும் இருக்கும் நாடுகளில் கீழ்சபை நிர்வாகத்துறை தலைவர் மீது குற்றம் காட்டும் உரிமையும், மேல்சபை அந்த குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் உரிமையும் பெற்றுள்ளன. இதனால் நேர்மை தவறாமல் நீதி வழங்கப்படும். அத்துடன் நிர்வாகத் துறையின் உரிமையும் - பாதுகாக்கப்படுகிறது.

**ஈரவை சட்டமன்றத்தின் தீமைகள்:**

**1)மக்களவையின் மதிப்பைக் குறைக்கிறது:**

சட்டமன்றத்தில் முதலாவது சபையான கீழ்சபை மக்கள் சபையாகும். இது மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சபையாகும். எனவே இந்த சபை மக்களின் ஆர்வத்தையும் பிரதிபலிக்கிறது. கீழ்சபையின் முக்கியத்துவத்தைக் அது குறைத்து விடுகிறது.

**2)மேல்சபை பிற்போக்குத் தன்மையுடையது:**

பொதுவாக மேல்சபை உறுப்பினர்கள் பழைமை வாதிகளாகவும் பிற்போக்குத் தன்மையுடையவர்களாகவும் உள்ளனர். இவர்கள் கீழ்சபையான பொதுமக்கள் சபையின் முன்னேற்றத் திட்டங்களுக்கு இடையூறாகவும் தடைகள் ஏற்படுத்துபவர்களாகவும் இருக்கின்றனர். எனவே மேல்சபை பயனற்றதும், பிற்போக்குத் தன்மை கொண்டதுமாக உள்ளது.

**3)காலதாமதத்தை ஏற்படுத்துகிறது.**

ஈரவை முறையில் மசோதாக்களை நிறைவேற்றுவதில் தேவையற்ற காலதாமதம் ஏற்படுகிறது. கீழ்சபையில் மசோதாக்கள் நன்கு ஆராயப்படுகின்றன, விவாதிக்கப்படுகின்றன. சிறப்புக் குழுக்கள் மூலம் மசோதாக்களை நன்கு ஆய்ந்து திருத்த முடியும். எனவே மசோதாவை திருத்து வதற்கும் சீராக்குவதற்கும் மேல்சபை தேவையில்லை.

**4)மேல்சபை வீண் செலவை ஏற்படுத்துகிறது:**

கீழ்சபை மசோதாக்களை அப்படியே ஒப்புக் கொண்டு நிறைவேற்றுவதையே வேலையாகக் கொண்ட மேல்சபைக்கு செலவிடப்படும் தொகை வீணானதேயாகும்.

**5)மேல் சபைஜனநாயக முறைக்கு முரனானது:**

கீழ்சபையின் உறுப்பினர்கள் அந்தந்த தொகுதிகளிலுள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவார்கள். ஆனால் மறைமுகமாகத் தேர்ந்தெடு உறுப்பினர்களைக் கொண்ட மேல்சபை, கீழ்சபையான மக்கள்க கட்டுப்படுத்துவது உண்மையான ஜனநாயக மாகாது. எனவே ஜனநாயக முறைக்கு முரணானது ஆகும்.

**6)கூட்டாட்சி அரசுக்கு மேல்சபை தேவையில்லை:**

கூட்டாட்சி அரசிற்கு மேல் சபை தேவை இல்லை. கூட்டாட்சி நாடுகளில் மாநிலங்களுக்கு சட்டம் இயற்றும் உரிமை அரசியலமைப்பின்படியே கொடுக்கப்பட்டுள்ளது. இந்தியா அமெரிக்கா போன்ற கூட்டாட்சி நாடுகளில் மாநிலங்களுக்கும் தங்களை ஆளுவதற்கு சட்டங்களை இயற்றிக் கொள்ள அரசியலமைப்பின்படியே உரிமை உண்டு. எனவே கூட்டாட்சியில் மேல்சபை முக்கியமானதாக இல்லை, தேவையும் இல்லை என்று கூறலாம்.

**7)கீழ்சபையில் குழுக்கள் செயல்படுவதால் மேல்சபை தேவை இல்லை:**

கீழ்சபையில் ஒரு மசோதாவை நிறைவேற்றும்போது ஏற்படுகின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கென்று அவ்வப்போது சிறப்புக்குழுக்கள் அமைக்கபடுகிறது. இதனால் அதே மசோதாவை மறுப்பு -பரிசீலனை செய்யது நிறைவேற்ற மேல்சபை அவசியமில்லை.

**8)மேலவையின் அமைப்பின் ஒருமைப்பாடினமை.**

இந்தியாவில் மேலவை உறுப்பினர்களில் 12 பேர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். மேலவை உறுப்பினர்களின் நியமன முறை குடியாட்சி முறைக்கு எதிரானது ஆகும். மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அது கீழ்சபைக்கு போட்டியான அவையாக அமையும். இப்படி முரண்பாடுகள் கொண்ட மேல்சபை அவசியமில்லை.

**9)கீழ்சபையின் ஏதேச்சதிகாரத்தைத் தடுக்க மேல்சபை தேவையில்லை:**

ஓரவை சட்டமன்றத்தில் பெரும்பான்மை கட்சியின் ஆதிக்கமே மேலொங்கி நிற்கும் என்றும், சபை எதேச்சதிகாரமாக செயல்பட வாய்ப்பு உள்ளது என்றும், அதனைக் கட்டுப்படுத்துவதற்கான மேல் சபை அவசியம் தேவை என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

**10)கீழ்சபைக்கும் மேல்சபைக்குமிடையே தோன்றும் முரண்பாடுகள்:**

கீழ்சபைக்கும், மேல்சபைக்குமிடையே அடிக்கடி முரண்பாடுகளும் முட்டுக்கட்டைகளும் தோன்றுகின்றன. இந்த இரண்டு சபைகளின் அமைப்பிலும், அதிகாரத்திலும், ஆர்வத்திலும் வேறுபாடுகள் நிலவுகின்றன. எந்த சபை உயர்ந்தது, எந்த சபை அதிக அதிகாரமுடையது என்று சபைகளுக்கிடையே போட்டி மனப்பான்மை ஏற்படுகிறது. இதன் விளைவாக மசோதாக்கள் இயற்றுவதில் அதிக கால தாமதம் ஏற்படுகிறது. இதனால் நாட்டிற்குத் தீங்கு ஏற்படுகிறது. எனவே மேல்சபை தேவை இல்லை .

## UNIT-V

## நீதித்துறையின் பணிகள்:

1) **நீதி வழங்குதல்: -**

வழக்குகளை விசாரிப்பதற்கும் தீர்ப்பு வழங்குவதற்கும் நடைமுறை விதிகள் உள்ளன. தீர்ப்பு வழங்குவதற்கு முன் வழக்குகளின் சூழ்நிலைகள் ஆராயப்படுகின்றன. சாட்சியங்களும் விசாரிக்கப்படுகிறது. வாதங்கள், எதிர்வாதங்கள் செய்யப்படுகின்றன. நடைபா இறுதியில் இவைகளின் பின் சம்பந்தப்பட்ட சட்ட விதிகளின்படி தீர்ப்பு வழங்கப்படுகிறது. வழக்குகளில் சிவில் வழக்குகள், கிரிமினல் வழக்குகள் என்று இரண்டு வகைகள் உள்ளன. இவ்வாறு வழக்குகளை விசாரித்து நீதி வழங்குவது நீதி மன்றங்களின் கடமையாகும்.

2) **சட்டங்களுக்கு விளக்கம் அளித்தல்** :

சட்டமன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்கள் தெளிவற்றதாகவும் ஐயப்பாடுகளைத் தோற்றுவிப்பதாகவும், சொல் மாறுபாடு, கருத்து முரண்பாடு ஆகியவைகளைக் கொண்டதாகவும் இருக்கலாம்.

நீதிமன்றங்கள் சட்டங்களுக்கு விளக்கம் அளித்து ஐயப்பாடுகளை அகற்றுகின்றன.

3) **உரிமைகளின்காவலன்:**

மக்கள் தங்கள் உரிமைகள் பிறரால் பறிக்கப்படும்போது நீதிமன்றங்களில் முறையீடு செய்யலாம். நீதிமன்றங்கள் இதை விசாரித்து உரிமைகள் பறிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி நீதிமன்ற தடை ஆணைகள் (Injunction) பிறப்பிக்கும். தனது தடை ஆணைகளுக்குப் அடி பணியாதவர்களைத் தண்டிக்கும். நீதிமன்றங்கள் தனது நீதிப்பேராணை (Writ) மூலம் மக்களின் உரிமைகளை தனிநபர் மற்றும் அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து காக்கின்றன. காலம்

4) **அரசியலமைப்பின் காவலன்:**

மன்றங்கள் அரசியலமைப்பின் காவலனாகச் செயல்படுகின்றது. ஒரு நாட்டில் அரசியலமைப்புச் சட்டங்களே அடிப்படைசட்டங்களாகக் கருதப்படுகின்றன. அவை அடிப்படை பிறப்பிடமாகவும் உள்ளன. எனவே தான் அரசியலமைப்பு நாட்டின் உன்னத சட்டமாகவும் கருதப்படுகிறது. புனிதமானதாகும், உரிமைகளின் பிறப்பிடமாகவும் உள்ளது.

5) **நீதி விசாரணைக்குழு:**

அரசாங்க அலுவலர் மீதோ அல்லது அமைச்சர்கள் .

வக்கற்றச்சாட்டுகளை விசாரிக்க ஒரு நீதிபதியோ அல்லது பல சாட்டப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணைக் குழு அமைக்கப்படலாம். அத்துடன் நாட்டில் ஏற்படும் மிகப்பெரிய அழிவுகள், கலவரங்கள், சமுதாயப் பிரச்சனைகள் ஆகியவற்றை விசாரிக்கவும் நீதிபதிகளைக் கொண்ட விசாரணைக்குழு அமைக்கப்படலாம். இந்த நீதிபதிகள் செய்தன பற்றியும், செய்யத் தவறியதைப் பற்றியும் விசாரித்து அறிக்கையாக அரசிடம் சமர்ப்பிப்பார்கள்.

**6)சட்டமியற்றுதல்: -**

தங்கள் முன்பு விசாரணைக்கு வரும் ஒரு சில வழக்குகளுக்கு சட்டத்தின் துணை கொண்டு நீதி வழங்க முடியாத நிலை ஏற்படும். இது சட்டத்தில் காணப்படும் குறையால் ஏற்படுவதாகும். இந்தக் குறையைப் போக்க நீதி, நியாயம், நேர்மை, ஆகியவைகளின் அடிப்படையில் நீதிபதிகள் தாங்களே 'ஒரு கொள்கையை வகுத்து நீதி கூறுகின்றனர். இதன்முலம் நீதிபதிகள் சட்டங்களை உருவாக்குகின்றனர்.

**7) ஆலோசனை கூறும் பணி:**

ஆலோசனை கூறும் பணியையும் நீதிமன்றங்கள் செய்கின்றன. மேலும் பல அரசியலமைப்பு சார்ந்த சிக்கல்கள் ஏற்படும் பது அரசாங்கம் தலைமை நீதிமன்றத்தின் ஆலோசனைகளைக் கேட்கலாம் இவ்வாறு நீதிமன்றங்கள் சட்டத்தின் மீதான தங்கள் கருத்தையும் ஆலோசனைகளையும் அளிக்கும் பணியையும் செய்து வருகிறது.

**5) நிர்வாகப் பணிகள்:**

தலைமை நீதிமன்றமும், உயர்நீதி மன்றங்களும் தங்கள் அலுவலர்களை தாங்களே நியமித்துக் கொள்கின்றன. இவர்களின் பணிகளை ஒழுங்குபடுத்துகிறது. வழக்குகளின் போது சிறுவர்களின் சொத்தை நிர்வாகம் செய்வதற்காக நீதிமன்றங்கள் நிர்வாகிகளை நியமிக்கின்றன.

**நீதித்துறையின் சுதந்திரம்:**

**நீதித்துறையின் சுதந்திரத்தை அடையும் வழிகள்:**

நீதித்துறையின் சுதந்திரம் எல்லா நாடுகளிலும் வற்புறுத்தப்படுகிறது. நீதித்துறையின் சுதந்திரத்தைக் கீழ்க்கண்ட வழி முறைகளில் அடையலாம்.

1) **பதவியடையும் முறை:**

நீதிபதிகள் தங்கள் பதவிகளை அடையும் முறையின் வாயிலாக நீதித்துறையின் சுதந்திரத்தைப் பெற முடியும். முதலாவது நீதிபதிகள் அரசியல் கட்சிகளின் தலையிடு இல்லாமலும், நல்ல சட்ட அறிவு உள்ளவர்களாகவும் நியமிக்கப்பட வேண்டும். நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுதல், சட்டமன்றங்களால் தேர்ந்தெடுக்கப்படுதல் நிர்வாகத்துறையினரால் நியமிக்கப்படுதல் ஆகியவையாகும்.

2) **மக்களால் தேர்ந்தெடுக்கப்படுதல்:**

நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதால் சில குறைபாடுகள் தோன்றுகிறது. ஒரு சில நேரங்களில் நேர்மையும், நாணயமும்,சட்ட அறிவும் இல்லாத நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விடலாம். தேர்தலில் நிற்கும். நீதிபதிகள் அரசியல்வாதிகளாகி விடுகின்றனர். இவர்கள் மறு தேர்தலிலும் நிற்பதற்காக தங்கள் பதவிக்காலத்தில் நேர்மையற்ற வதிமுறைகளைப் பின்பற்ற வாய்ப்பு ஏற்படுகிறது.

b) **சட்டமன்றங்களால் தேர்ந்தெடுக்கப்படுதல்:**

சட்டமன்றங்களால் நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படும் முறை சுவிட்சர் லாந்தில் பல கேன்டன்களில் காணப்படுகிறது. சட்டமன்றங்கள் நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் போது பல குறைபாடுகள் ஏற்படுகிறது. இந்த முறையில் நீதிபதிகளின் தேர்ந்தெடுக்கப்படும்போது அரசியல் கட்சிகளின் தலையீடு ஏற்படுகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே நீதிபதிகளாக நியமிக்கப்படலாம். இப்படி சட்டமன்றங்களால் நீதிபதிகள் நியமிக்கப்படுவதால் நீதிபதிகளின் நேர்மை குறைகிறது. பொருத்தமான, திறமையான நீதிபதிகள் நியமிக்கப்படாமல்

போய்விடலாம் நீதிபதிகள் சட்டமன்றத்திற்கு கட்டுப்பட்டு செயலாற்றும் நிலையும் ஏற்படுகிறது. இதனால் நீதித்துறையில் சட்டமன்றத்தின் தலையீடு ஏற்படுகிறது. இவ்வாறு இதுவும் குறைவுள்ள முறையாகவே காணப்படுகிறது.

**நிர்வாகத்துறையினால் நியமிக்கப்படுதல்:**

நீதிபதிகள் நிர்வாகத்துறையினரால் நியமிக்கப்படுவதுதான் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. உலகத்தில் பல நாடுகளில் இந்த நம முறையே பின்பற்றப்படுகிறது. சட்டத்துறையில் நல்ல அனுபவம் உடையவர்களையும், நேர்மையானவர்களையும் நிர்வாகத்துறையினர் நியமனம் செய்யலாம். இந்தியாவில் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளும் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்.

2) **நீதிபதிகளின் பதவிக்காலம்:**

நீதிபதிகளுக்கு நன்னடத்தையும் திறமையும் இருக்கும் வரைநீண்டபதவிக்காலம் அளிப்பதே சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. நீதிபதிகள் நீண்ட காலம் பதவியிலிருக்கும் போது சட்ட நுணுக்கங்களையும், முன்தீர்ப்பு முறைகளையும் அறிந்து செயல்படுவர். அமெரிக்காவில் நீதிபதிகள் வாழ்நாள் முழுவதும், இந்தியாவில் அறுபத்தைந்து வயது வரையிலும் பதவி வகிக்கின்றனர். ஆனால் இவர்கள் தவறு செய்தால் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு பதவியிலிருந்து விலக்கப்படுவர். இவ்வாறு தங்கள் பதவிக் காலத்தின் நிமித்தம் நீதிபதிகள் சுதந்திரமாகச் செயல்படலாம்.

3. **நீதிபதிகளின் பணிப்பாதுகாப்பு:**

நீதிபதிகள் சுதந்திரமாகப் பணியாற்றுவதற்கும், சார்பின்றி செயலாற்றுவதற்கும் அவர்களது பணிப்பாதுகாப்பு அவசியமாகும். ஒரு சில நேரங்களில் ஆட்சியாளர்களுக்கு எதிராகவும், அதன் வர்க்கத்திற்கெதிராகவும், பெரும்பான்மையானருக்கு எதிராக தங்களை

நியமனம் செய்தவர்களுக்கு எதிராகவும் நீதிபதிகளின் அமையலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கு பணி பாதுகாப்பு இருந்தால் தான் நீதிபதிகள் சுதந்திரமாக தீர்ப்பு வழங்க இயலும்.

**நீதிபதிகளின் ஊதியம்:**

இந்தியாவில் தலைமை நீதிமன்ற தலைமை நீதிபதி ரூ.33,000, பிறபதிகள் ரூ.30,000 சம்பளமாகப் பெறுகிறார்கள். இவர்களுக்கு ஓய்வூதியமும் அளிக்கப்படுகிறது.

**5) நீதிபதிகளின் தகுதிகள்:**

இந்தியாவில் ஒருவர் தலைமை நீதிமன்ற நீதிபதியாக வேண்டுமானால் மாநில உயர்நீதிமன்றம் ஒன்றில் ஐந்து ஆண்டுகளாவது நீதிபதியாகப் பணியாற்றியிருக்க வேண்டும். அல்லது பத்து ஆண்டுகளாவது உயர்நீதிமன்ற வழக்கறிஞராகப் பணியாற்றியிருக்க வேண்டும். அத்துடன் புகழ்பெற்ற சட்டநிபுணராகவும் இருக்க வேண்டும்.

**6) நீதித்துறை பிற துறைகளிலிருந்து பிரிக்கப்படுதல் வேண்டும்:**

நீதித்துறை சுதந்திரமாக செயல்பட வேண்டுமானால் அது சட்டத்துறையிலிருந்தும், நிர்வாகத்துறையிலிருந்தும் பிரிக்கப்பட வேண்டும். அதாவது அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு நடைமுறைப்படுத்தப்படவேண்டும். நீதித்துறையும் நிர்வாகத்துறையும் சார்பற்று செயல் பட வேண்டும்.

**7.சட்டத்துறை, நிர்வாகத்துறைகளுடன் நீதித்துறையின் தொடர்பு:**

அரசாங்கத்தின் முப்பெரும் நிறுவனங்களாகிய சட்டத்துறை நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகியவைகளிடையே ஒன்றிற்கொன்று தொடர்பு உண்டு. அரசாங்கம் திறமையாகவும், இணக்கமாகவும் செயல்பட வேண்டுமானால் இந்த மூன்று நிறுவனங்களுக்குமிடையே தொடர்பு. அவசியமாகிறது.

**சட்டத்தின் ஆட்சி பற்றி டைசியின் (Dicey) விளக்கம்:**

சட்டத்தின் ஆட்சி' என்ற தத்துவத்தை முதன் முதலாக விளக்கியவர் பேராசிரியர் டைசி என்பவராவார். இவர் தன்னுடைய 'அரசியலமைப்பின் சட்டம்' (The Law of the constitution) என்ற நூலில் தனது கருத்துக்களை விளக்கிக் கூறியுள்ளார். இவர் தனது கருத்துக்களை இங்கிலாந்து நீதித்துறையின் செயல்பாட்டின் அடிப்படையிலேயே தெரிவித்தார்.

**டைசியின் முதல் கருத்து:**

'ஒருவன் சட்டத்தை மீறிவிட்டான் என்றால் சாதாரண நீதிமன்றங்களால் சட்டப்படி விசாரிக்கப்பட்டு சட்டத்தை மீறிவிட்டான் என்று நிரூபிக்கப்பட்ட பின்னரே தண்டிக்கப்பட வேண்டும்.

**டைசியின் இரண்டாவது கருத்து:**

தனிநபர்களும் அரசாங்க அலுவலர்களும், உயர்நிலை அடைந்தவர்களும் சட்டத்தின் முன்பும் நீதிமன்றத்திலும் சமமாகக் கருதப்படுவார்கள். ஒவ்வொரு வருக்கும் தனி நீதி கிடையாது. அமைச்சர் என்றாலும் சாதாரணக் காவலர் என்றாலும் சாதாரணச் சட்டத்தால் சாதாரண நீதிமன்றத்தால் (Ordinary Law and Ordinary Court) சாதாரண முறையில் விசாரிக்கப்படுவர்.

**டைசியின் மூன்றாவது கருத்து:**

அரசியலமைப்பின் விதிகளின் காரணமாக மனித உரிமைகள் பிறக்க வில்லை. அவ்வப்போது வழங்கப்படும் நீதிமன்றத் தீர்ப்புகளில் மனித உரிமைகள் காணக்கிடக்கின்றன. அந்த உரிமைகளை நீதிமன்றங்களே காத்து வருகிறது.

**சட்டத்தின் ஆட்சிக்குள்ள விதிவிலக்குகள்**

1. 'அரசர் தவறு செய்ய முடியாது' (The King can do no wrong) என்ற கோட்பாடு அரசர் சட்டத்திற்கு மேலானவர் என்று காண்பிக்கிறது.

அரசருக்கெதிராக யாரும் வழக்கு தொடர முடியாது. இங்கு சட்டத்தின் ஆட்சி அரசரைக்கட்டுப்படுத்தவில்லை.

2.சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்பதிலும் பல விதிவிலக்குகள் காணப்படுகிறது. இங்கிலாந்துச் சட்டங்களை மீறும் அயல் நாட்டுத் தூதுவர்களுக்கு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. மேலும் சட்டத்தை மீறும் ராணுவ வீரர்கள் ராணுவச் சட்டப்படியே, விசாரிக்கப்படுகிறார்கள். நீதிபதிகள் செய்யும் தவறுகளுக்குக்கும் விதி விலக்கு அளிக்கப்படுகிறது. 1947-ம் வருட 'அரசரின் ஆணைச்சட்டம்' சட்டத்தின் ஆட்சிக்கெதிரான பல கருத்துக்களைக் கொண்டுள்ளது. இது அரசாங்க அதிகாரிகளுக்கு பல தனி சலுகைகளையும் உரிமைகளையும் வழங்குகின்றது.

3. தற்கால இங்கிலாந்து அரசு மக்கள் நலம் நாடு அரசாக' (Wel'fare State) அமைந்துள்ளது. இதனால் நிர்வாகத் துறையின் அதிகாரம் விரிவாக்கமடைந்துள்ளது. ஆட்சித்துறையிலுள்ள சில நிறுவனங்களான ஆயுள் இன்சூரன்ஸ் கழகம், வாணிபக்கழகம், ரெயில்வே போர்டு, கல்வித்துறை ஆகியவை தங்கள் ஆட்சிப்பணிகளோடு நிற்காமல் மக்களுக்கு நீதியும் வழங்குகிறது. இதற்கு 'ஆட்சித்துறை நீதி' என்று பெயர்.

4. சட்டமன்றமும் தன்னுடைய அதிக வேலைப் பளுவின் காரணமாக தனக்குள்ள ஒப்படைக்கப்பட்ட சட்டம் செய்யும் உரிமையின் படி (Delegated Powers) சட்டமியற்றும் அதிகாரத்தை நிர்வாகத் துறையினரிடமும் ஒப்படைத்துள்ளது. இதன்படி நிர்வாகத்துறையினர் பல விதிகளை உருவாக்குகிறார்கள்.

5. இங்கிலாந்தில் பல உரிமைகள் பாராளுமன்ற சட்டங்கள்சட்டங்கள் மூலமாகவே மக்களுக்கு கிடைத்தது. உதாரணம் - பேச்சுரிமை ஓய்வூதிய உரிமை, பத்திரிகைகளின் உரிமை

6. போர் போன்ற நெருக்கடியான காலங்களில் மக்களைக் கைது செய்வதும், முன் அறிவிப்பு இல்லாமல் வீடுகள் சோதனையிடப்படுவதும் நடைபெறுகிறது.

**ஆட்சித்துறைச் சட்டம்** :

பேராசிரியர்டைசியின் கூற்றுப்படி' அரசாங்க அதிகாரிகள் தங்கள் பதவியினிமித்தம் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக ஆற்றும் கடமைகள் மற்றும் நடவடிக்கைகள், மக்களுடன் தொடர்வு கொள்ளும் போது மக்களின் உரிமைகள் கடமைகள் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் சட்டப்பகுதிதான் ஆட்சித்துறைச் சட்டம்' என்றழைக்கப்படுகிறது.

டாக்டர் ஜென்னிங்ஸ் (Dr. Jennings) என்வர் கருத்துப்படி ஆட்சித்துறை அலுவலின் அமைப்பு' அதிகாரங்கள், கடமைகள் ஆகியவற்றைத் தீர்மானிப்பதே ஆட்சித்துறைச் சட்டமாகும்'.சுருங்கக்கூறின் ஆட்சித்துறைச்சட்டமென்பது அரசாங்கத்திற்கும், காரிகளுக்கும், மக்களுக்கும் இடையே உள்ள தொடர்பையும் அதிகாரிகளுடைய நிலையையும் பொறுப்பையும் அங்கு ஏற்படும்

**<u>ஆடசித்துறைச் சட்டத்தின் நிறைகள் :</u>**

ஆட்சித்துறைச் சட்டத்தில் தனிமனிதனுக்குத் தகுந்த பாது காப்பும் நீதியும் அளிக்கப்படுகிறது. அரசாங்க அலுவலர்கள் குடிமக்களுக்குக் கருதி இழைத்த தீங்கும், அலுவலின் போது தவிர்க்க முடியாது இழைத்த தீங்கும் வேறுபடுத்தப்படுகின்றன.

2.அரசு அதிகாரிகளுக்கும் பாதுகாப்பும் நீதியும் நியாயமும் கிடைக்கிறது. அரசாங்கப் பணி புரியும் போது நிகழ்ந்த தீங்குகட்கு

அரசாங்கமே பொறுப்பேற்று இழப்பீடு வழங்குவதால் அதிகாரிகளின் செல்வாக்கு பாதுகாக்கப்படுகிறது. -

3.ஆட்சித் துறையின் விதிமுறைகளையும் நுணுக்கங்களையும் ஆட்சித்துறை நீதிமன்றத்தின் நீதிபதிகள் நன்றாக அறிந்திருப்பதால் வழக்குகள் நேர்மையாகவும் வேகமாகவும் விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்படுகிறது. அத்துடன் சாதாரண நீதிமன்றங்களின் வேலைப் பளுவும் குறைகிறது.

4. ஆட்சித்துறை நீதிமன்றத்தில் வழக்காடுவதற்கான செலவு சாதாரண நீதிமன்ற வழக்கில் ஏற்படும் செலவைவிடக் குறைவானதாகும்.

5.ஆட்சித்துறைச் சட்டம் தொகுக்கப்படாததாகவும் தீர்ப்பு வழிச்சட்டமாகும் (Case Law) அமைந்துள்ளது. எனவே நெகிழ்வுத் தன்மை கொண்டதாகவும், மாறுபட்ட சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான தாகவும், மக்கள் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதுமாகவும் இருக்கிறது.

**ஆட்சித்துறைச் சட்டத்தின் குறைகள் :**

1. ஆட்சித்துறைச் சட்டத்தில் தனிமனித சுதந்திரம் பாதுகாக்கப்பட வில்லையென ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் கருதுகின்றன. ஆட்சித்துறையில் பணிபுரியும் அதிகாரிகள் சாதாரண நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவதில்லை. இவர்களுக்கென்று தனிச் சலுகை பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளன.

2. ஆட்சித்துறை நீதிமன்றங்கள் அரசாங்க அலுவலர்களுக்கே சாதகமான தீர்ப்பை அளிக்கின்றன. இந்த நீதி மன்றங்களிலிருந்து குடிமக்களுக்கு நேர்மையான நீதி கிடைப்பதில்லை.

3. ஆட்சித்துறை நீதிமுறையில் குற்றவாளியே நீதிபதியாகவும் அமைகிறார். ஆட்சித்துறை அலுவலரின் குற்றத்தை ஆட்சித்துறை நீதிமன்றமே விசாரிக்கும் போது நீதியின் நேர்மை குன்றிவிடும்.

4. ஆட்சித்துறை நீதிமன்றங்கள் சட்டத்தின் அடிப்படையில் தீர்ப்பளிக்காமல் அரசாங்கக் கொள்கைகளின் அடிப்படையில் தீர்ப்பளிக்க வாய்ப்பு இருக்கிறது. நீதிபதிகளின் தீர்ப்புகள் நீதிமன்றங்களின் முன் தீர்ப்பின் (Precedent) அடிப்படையில் அமையாமல் அரசியல் தீர்ப்பின் (Political Decision) அடிப்படையில் அமைகிறது.

**<u>அரசியல் கட்சி</u>**

அரசியல் கட்சி என்பது சில கொள்கையின் அடிப்படையில் அரசாங்கத்தை அமைக்க முற்படும்.

**அரசியல் கட்சியின் தன்மைகள்:**

1. அரசியல் கட்சிகள் அமைப்புடையனவாக (organisation) இருக்க வேண்டும். அமைப்பு இல்லாத கட்சிகள் தெருக் கூட்டம் போல ஆகிவிடும்.

2. அரசியல் கட்சிகள் கொள்கையின் அடிப்படையில் அமைய வேண்டும். அப்போதுதான் ஒரு மித்த கொள்கை உடையவர்கள் இணைந்து ஒரு கட்சியாக அமைய முடியும்.

3. பொதுவாக அரசியல் கட்சிகள் தேசிய ரீதியில் அமைந்திருத்தல் நல்லது. தேசிய நலனே கட்சிகளின் குறிக்கோளாக இருந்தால் சிறப்பாக இருக்கும்.

4. கட்சிகளுக்குத் திட்டங்கள் அவசியம். அப்போதுதான் திட்டங்களை நிறைவேற்றுதல் கட்சிகளின் நோக்கமாக அமையும்.

5.அரசியல் கட்சிகளுக்கு அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணமும், அரசியல் அதிகாரத்தை அடைய வேண்டும் என்ற ஆசையும் இருக்க வேண்டும். அரசாங்கத்தை அடைவதற்கு அரசியலமைப்பு முறையைக் கையாள வேண்டும்.

**அரசியல் கட்சிகளின் பணிகள் :**

**1. அரசாங்கத்தை அமைத்தல்;**

அரசியல் கட்சிகள் தங்கள் திட்டங்களையும் கொள்கைகளையும் வகுத்து வாக்காளர்களின் முன் சமர்பித்து ஆதரவு திரட்டுகின்றன. தங்கள் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்து தேர்தலில் போட்டியிடுகின்றன. தேர்தலில் பெரும்பான்மைத் தொகுதிகளில் வெற்றிபெற்று அரசியல்கட்சி அரசாங்கத்தை அமைக்கிறது.

2. பொதுமக்கள் கருத்தை உருவாக்குகிறது: பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில் அரசியல் கட்சிகள் முக்கிய பங்கு கொள்கிறது. பலகட்சி வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டு தங்கள் கொள்கைகளை மக்கள் முன்வைக்கிறார்கள். இவைகளில் ஒன்றை மக்கள் தேர்ந்தெடுக்க முடிகிறது. இதன் வழியாக பொதுமக்கள் கருத்தை அறிய முடிகிறது. கதைனர்.

**3. பாராளுமன்ற முறை சிறப்பாக செயல்பட உதவுகிறது:** அரசாங்கத்தில் நடக்கும் தவறுகளை எதிர்கட்சியினர் சுட்டிக்காட்டுகிறார்கள். இதனால் ஆளும் கட்சியினர் தங்கள் தவறுகளை திருத்திக் கொள்ள முடிகிறது.

**4. மக்களை பொதுவாழ்வில் ஈடுபடுத்துகிறது:**

அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கைகளை விளக்கும் போதும், வாக்குச் சாவடிக்கு சென்று வாக்களிக்கும் போதும் மக்கள் பொதுவாழ்விலும் ஈடுபாடுடையவர்களாக மாறுகிறார்கள். தாங்கள் வாழும் பகுதியின் வளர்ச்சியிலும், ஆட்சி முறையிலும் ஆர்வத்துடன் பங்கு கொள்கிறார்கள்.

**5. அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தொடர்பை ஏற்படுத்துகிறது:**

அரசியல் கட்சிகள் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தொடர்பை ஏற்படுத்தும் இணைப்புச் சங்கிலியாக அமைகின்றன. பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாகவும் மக்களின் பிரதிநிதிகளாகவும் அமைகின்றனர். கட்சிகளின் வழியாகவே அரசாங்கக் கொள்கைகளுக்கு மக்களின் ஆதரவு திரட்டப்படுகிறது இவ்வாறு.கட்சிகள் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் தொடர்பை ஏற்படுத்துகின்றன.

**6. அரசாங்க நிறவனங்களுக்கிடையே சுமுகமான உறவை ஏற்படுத்தகிறது:**

பாராளுமன்றமும், நிர்வாகத்துறையும் சுமுகமாகச் செயல்படுவதற்கு அரசியல் கட்சிகளே காரணம். பாராளுமன்ற முறையில் சட்டமன்றத்தில் பெரும்பான்மை உடையவர்களே நிர்வாகத் துறையினராக அமைந்து நிர்வாகத்துறைக்கும் சட்டமன்றத்துக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தகின்றனர்.

**7. அரசாங்கம் தொடர்ச்சியாக நடைபெற உதவுகிறது:** ஆளும் கட்சியினர் மக்கள் நம்பிக்கையை இழக்கும் போது எதிர்கட்சியினர் அரசாங்கத்தை ஏற்று நடத்துகின்றனர். இதனால் அரசாங்கம் தொடர்ச்சியாக நடைபெற வழி வகை செய்யப்படுகிறது.

## <u>கட்சி முறைகள்</u>

### 1) ஒரு கட்சி முறை:

எதிர் கட்சி எதுவுமில்லாமல் ஒரே கட்சி ஆட்சி செய்துவரும் ஒரு கட்சி முறை என்கிறோம். இம்முறையில் ஆளும் கட்சி வேறு எந்த கட்சியையும் அனுமதிப்பதில்லை. ஒரு கட்சி முறை உள்ள நாடுகள் பொதுவாக வல்லாட்சி நாடுகளாகவே அமைகின்றன. கட்சியானதும் அரசாங்கத்தின் எல்லா நிலைகளிலும் தலையிடுகிறது. அரசாங்க அலுவலர்கள் யாவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாகவும்,

கட்சியில் செல்வாக்கு உடையவர்களாகவும் இருக்கின்றனர். கட்சியின் தீர்மானத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துகின்றனர்.

**ஒரு கட்சி முறையின் நன்மைகள்:**

ஒரு கட்சி ஆட்சியினால் சில பயன்கள் விளைந்துள்ளன. அத்தகைய ஆட்சி நிலவிய நாடுகளில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைக் காண்கிறோம். சீர்குலைந்த பொருளாதார நிலைமாறி மிகக்குறுகிய காலத்தில் சீரடையும் நிலை எற்பட்டுள்ளது. மேலும் அரசாங்கம் திறமையுடன் செயல்படுகிறது. வீணான விவாதங்களிலும் கருத்து முரண்பாடுகளிலும் காலம் கழிவதில்லை கட்டுப்பாடுடனும் அரசாங்கம் இயங்கி வருகிறது. ஒரே நோக்குடனும் சீரிய கட்டுபாட்டுடனும் இயங்குகிறது.

**ஒரு கட்சி முறையின் தீமைகள்** :

ஒரு கட்சி ஆட்சி முறை மக்களாட்சியின் கோட்பாடுகளுக்கு நேர் எதிரானது ஆகும். ஏனெனில் ஒரு கட்சி ஆட்சி முறையின் விளைவு எதேச்சதிகாரம் ஆகும். ஏதேச்சதிகாரியின் ஏவலாளாக கட்சி மாறி விடுகிறது. மக்களின் பேச்சுரிமை, எழுத்துரிமை அங்கு நடுக்கப் படுகின்றன. அரசாங்கத்தின் குறைகளை எடுத்துரைக்க எதிர்க்கட்சி எதுவும் இல்லை. ஆகவே அரசாங்கம் தனது விரும்பம் போல் ஆட்சி செய்கிறது. இதனால் மனித உரிமைகளுக்கு ஊறு ஏற்படுகிறது.

**2) இருகட்சி முறை:**

ஒரு நாட்டில் இரண்டு அரசியல் கட்சிகள் மட்டும் இருந்து ஒன்று ஆளும் கட்சியயாகவும், மற்றது எதிர்க்கட்சியாகவும் செயல் பட்டால் இருகட்சி முறை எனப்படும்.

**இரு கட்சி முறையின் நன்மைகள்:**

a) இரு கட்சி முறையில் பெரும்பான்மையுடைய ஒரு கட்சி ஆளும் கட்சியாகவும், பெரும்பான்மை பெறாத கட்சி எதிர்கட்சியாகவும் அமைகின்றன. அரசாங்கம் உறுதியுடனும், நிரந்தரமுள்ளதாகவும், வலிமை உள்ளதாகவும், நீண்டகாலதிட்டங்களை வகுத்து சட்டமாக்கக் கூடிதாகவும் இருக்கும். இரும்புக் கம்பிபோல வலிமை பெற்றிருக்கும்..

b) நாட்டில் இரண்டு கட்சிகள் செயல்படுவதால் மக்கள் ஒரு கட்சியைத் தேர்ந்தெடுத்து தமது விருப்பத்தைத் தெளிவாகக் காட்ட முடிகிறது. ஆகவே இம்முறையில் தான் உண்மையான பிரநிதித்துவ அரசாங்கத்தைக் காணமுடியும் எனலாம்.

## குறைகள்

a)சிக்கல் மிக்க சமுதாயப் பொருளாதார அமைப்பில் இருக்கும் பல்வேறு குழுக்களுக்கும் கருத்துக்களுக்கும் இரு கட்சி முறையில் வாய்ப்பும் பிரதிநிதித்துவமும் அளிக்கப்படுவதில்லை .

b) இரு கட்சி முறையில் ஆளும் கட்சி பாராளுமன்றத்தின் பெரும்பான்மை பெற்றிருப்பதால் அப்போது அமைச்சரவையின் வல்லாட்சி. (Cabinet Dictatorship) ஏற்படும்..

C) இரு கட்சி முறையில் பெரும்பான்மை என்ற பெயரில் சிறு பான்மையினர் ஆட்சி செய்கின்றனர். பெரும்பான்மைத் தொகுதிகளில் வெற்றி பெற்றவர்களின் மொத்த வாக்குகள் சிறுபான்மையினர் பெற்ற வாக்குகளை விட குறைவாக இருப்பதுண்டு. பெரும்பான்மை மக்களின் வாக்கைப் பெற்றவர்கள் எதிர்க்கட்சியாக இருக்க வேண்டியதுள்ளது.

d) இரு கட்சி முறையில் பெரும்பான்மையினரது ஏதேச்சதிகாரப் போக்கு நிலவுகிறது. சிறுபான்மையினரின் நலன் புறக்கணிக்கப்படுகிறது. அரசாங்க அலுவல்களில் பெரும்பான்மைக் கட்சியினரே நியமிக்கப் படுகின்றனர்.

**3) பல கட்சி முறை:**

ஒரு நாட்டின் அரசியலில் இரண்டுக்கும் மேற்பட்ட கட்சிகள் இருக்கும் முறையைப் பலகட்சி முறை என்கிறோம். பிரான்ஸ், இந்தியா போன்ற நாடுகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்..

**பல கட்சி முறையின் நன்மைகள்:**

a) பல கட்சி முறையில் விரிந்த வாய்ப்புகள் உள்ளன. பல்வேறு கட்சிகள் இருப்பதால் பலவகையான கருத்துக்கள் மலர்வதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இயற்கையில் பல்வேறுபட்ட கொள்கைகளை கருத்துக்களையும் உடைய மக்கள், இரண்டு கட்சிகளில் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக பல கட்சிகளுள் ஒன்றை தம் விருப்பம் போல தேர்ந்தெடுக்கலாம்.

b) பல கட்சி முறையில் உள்ள கூட்டு அரசாங்கத்திலிருந்து கட்சி விலகும் போது அமைச்சரவை வீழ்கிறது.

பல கட்சி முறையில் கூட்டரசாங்கம் அமைக்கப்படுவதால் எந்தக் கட்சியும் மற்ற கட்சி மீது எதேச்சதிகாரம் செலுத்துவதில்லை . மேலும் கட்சிகளின் வல்லாட்சி தடுக்கப்படுகிறது.

**பலகட்சி முறையின் தீமைகள்** :

a) பலகட்சி முறையில் அரசாங்கத்தை அமைக்கும் அளவுக்கு எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது. ஒன்றிற்கொன்று முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட கட்சிகளின் கூட்டு அரசு அமையும். இதனால் அரசாங்கக் கொள்கைகளிலும் திட்டங்களிலும் ஒருமைப்பாடு காண்பது அரிதாகி விடுகிறது.

b) பல கட்சி முறையில் எதிர்கட்சிகள் ஒருமுகமாகச் செயல் படுவதில்லை . அவர்களிடம் முரண்பட்ட கொள்கைகள் நிலவும். எதிர்கட்சியினருக்கு அரசாங்கத்தை அமைக்கும் உறுதியான வாய்ப்பு இருக்க முடியாது. எனவே எதிர்க்கட்சியிடமிருந்து பொறுப்பற்ற எதிர்ப்புகளே தோன்றும்.

c) பல கட்சி முறையில் ஏதேனும் ஒரு கட்சி அரசாங்கத்தை அமைப்பது முடியாமல் போகிறது. இதனால் அரசாங்கத்தை அமைப்பதில் குழப்பங்களும் நெருக்கடிகளும் தோன்றுகின்றன.

## செல்வாக்குக் குழுக்கள்

குடியாட்சி நடைபெறும் நாடுகளில் செல்வாக்கு குழுக்கள் தோன்றியுள்ளன. 'தங்கள் நலனைக் காப்பதற்காக அமைக்கப்பட்ட குழுக்களே 'செல்வாக்குக் குழுக்கள்' எனப்படும். இவை தன்னலக் குழுக்கள், அழுத்தக் குழுக்கள் என்ற பெயரிலும் அழைக்கப்படுகின்றன. வணிகர்கள், ஆலை முதலாளிகள். விவசாயிகள் தொழிலாளர்கள் போன்றோர் தங்கள் நலன்களைக் காப்பதற்க்காகக் குடிக்பயம். நிறுவனங்களையும் அமைத்துக் கொள்கின்றனர். இவை மன்றங்களுடன் தொடர்பு கொண்டு தங்களுக்குச் சாதகமான சட்டங்களை இயற்றவும், பாதகமான சட்டங்களை நீக்கவும் முயற்சிக்கும். செல்வாக்கு குழுக்கள் தற்கால அரசுகளின் தனிப் பண்பாக கருதப்படுகிறது.

### செல்வாக்குக் குழுக்களும் அரசியல் கட்சிகளும்:

செல்வாக்கு குழுக்கள் அரசியல் கட்சியிலிருந்து மாறுபட்டவை பாகும். கட்சிகள் விரிந்த அளவு திட்டங்களைவகுத்துச் செயல்படுகின்றன. பெரிய அமைப்புகளை உடையனவாகும். மேலும் இக் கட்சிகள் தேர்தல்களில் போட்டியிட்டு அரசாங்கத்தைக் கைப்பற்றி தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும். மேலும் அரசியல் கட்சிகள் சமுதாயத்தின் பலவகை சிக்கல்களை தீர்க்க முயற்சி செய்கின்றன.

ஆனால் செல்வாக்கு குழுக்கள் தங்கள் குழுவின் நலனைக் காப்பதற்கான நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொள்ளும். பெரிய திட்டங்களையோ, அரசாங்கத்தை அமைக்கும் எண்ணங்களை

உடையன வாகவோ இருக்காது. மேலும் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தியே தாங்கள் விரும்பியவற்றைப் பெற விழையும்.

செல்வாக்குக் குழுக்கள் பெரும்பாலும் தொழில் அடிப்படை யிலேயே அமைக்கின்றன. மருத்துவர் சங்கம், விவசாயிகள் சங்கம், ஆசிரியர் சங்கம், பஞ்சாலை தொழிலாளர் சங்கம், வியாபாரிகள் சங்கம் ஆகியவை எடுத்துக்காட்டுகளாகும்.

**செல்வாக்குக் குழுக்களின் பணிகள்: -**

செல்வாக்குக் குழுக்கள் பல பணிகளை ஆற்றுகின்றன.

a) பத்திரிகைகளின் மூலமாகவும், துண்டு பிரசுரங்கள் மூலமாகவும், பொது மேடைகளிலும் செல்வாக்குக் குழுக்கள் பிரச்சாரம் செய்து பொதுமக்கள் கருத்தை தங்களுக்கு சாதகமாக உருவாக்குகின்றன.

b) தங்களுக்கு சாதகமாக செயலாற்றக்கூடிய வேட்பாளர்களுக்கு தேர்தலில் எல்லா வகையிலும் உதவுகின்றன.

c) அரசாங்க அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் நலனை பேணுகின்றன.

d) அவசியம் ஏற்படும் போது வேலை நிறுத்தங்களிலும், பலாத்கார நடவடிக்கைகளிலும் இறங்குகின்றன.

e) சட்டமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் காரியங்களைச்சாதித்துக் கொள்கின்றன.